விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 15 சனிக்கிழமை (29.05.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 161

## முதல்வரின் சாரதி மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை முதல்வரின் சாரதி இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 12.15 மணியளவில் தான் கடமை முடித்து அரியாலையில் உள்ள தனது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது வழிமறித்த இனந்தெரியாதோர் தன்னைத் தாக்கியதாக அவர் முறையிட்டுள்ளார்.

அரியாலையைச் சேர்ந்த எஸ்.ரவீந்திரன் (வயது-36) என்பவரே தாக்கப்பட்டுள்ளார். தாக்கப்பட்டு படுகாயமடைந்த அவர், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-1)



யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் வெசாக் தின நிகழ்வுகளைக் காணச் சென்ற ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் உள்ளிட்டோர் அங்கு வைக்கப்பட்டிருந்த அலங்காரப் பொருள்களைப் பார்வையிடுவதைக் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# அமைச்சர் பீரிஸ் திடீர் வெளிநடப்பு!

# குழம்பிப்போன பத்திரிகையாளர்கள்

## அமெரிக்காவில் பரபரப்பு

(நியூயோர்க்)

அமெரிக்க தேசிய பத்திரிகையாளர் சங்கம் ஏற்பாடு செய்த கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அங்கிருந்து திடீரென வெளிநடப்புச் செய்ததால் பரபரப்பு ஏற்பட்டது. பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்ட அக் கூட்டத்திலிருந்து அமைச்சர் பீரிஸ் வெளியேறிய இச் சம்பவம் உலக அரசியல் வட்டாரங்களில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மீள்கட்டுமானப் பணிகளைத் துரிதமாக்க ஆசிய அபிவிருத்தி வங்கி தலைவர் பணிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள இடங்கள் வழமையான நிலைக்குக் கொண்டு வரப்படுதல் வேண்டும். அதற்காக குறித்த பகுதிகளுக்கான மீள்கட்டுமானப் பணிகளை இலங்கை அரசாங்கம் துரிதமாக்க வேண்டும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ஹருகிகோ குருடா தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்த அவர் நேற்று மாலை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நலனுக்காக இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங் (16 ஆம் பக்கம் பார்க்க)

## பெயர் இல்லாதவர்கள் உயிருடன் இல்லையாம்!

(கொழும்பு)

அரசு வெளியிட்டுள்ள பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் தற்போது உயிருடன் இல்லை என கருத வேண்டும் என பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் முடிபுற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் பின் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய அரசியல் பிரமுகர்களில் பலர் இராணுவத்தால் கொல்லப்பட்டு விட்டதாக செய்திகள் வெளியாகின்றன.

தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் என்று சுமார் 10 ஆயிரம் பேரின் பெயர் (16 ஆம் பக்கம் பார்க்க)

## மலேசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் உண்ணாவிரதம்!

### அகதி அந்தஸ்தை ஏற்றுக் கொள்ள வலியுறுத்தல்

(கொழும்பு)

அரசியல் புகலிடம் கோரிய இலங்கையர் மலேசியாவின் தடுப்பு முகாமில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர் என்று அங்குள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமையிலிருந்து 61 பேர் உணவு உண்ண மறுத்து வருகின்றனர். அவர்கள் தாங்கள் அரசியல் அகதிகள் என்று ஏற்றுக் கொள்வதோடு சர்வதேச உரிமைகளுக்கான அமைப்புக்களைத் தொடர்பு கொள்ள வழிஏற்படும் வரை உண்ணாவிரதத்தைக் கைவிடப் போவதில்லை என்று தெரிவித்துள்ளனர் என மலேசிய மனித உரிமை நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த நளினி ஏழுமலை தெரிவித்துள்ளார்.

ஆனால் அவர்கள் பின்னர் எவ்வாறு படகிலிருந்து இறங்கினார்கள்? அவர்களுக்கு ஏதாவது உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளதா? என்பது தெரியவரவில்லை.

இந்தோனே (16 ஆம் பக்கம் பார்க்க)

## குடிநீர் விநியோகத் திட்டத்தை துரிதப்படுத்தும் கலந்துரையாடல்

### அரச அதிபர் தலைமையில் யாழ்.செயலகத்தில்

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் யாழ்.குடாநாட்டுக்கான குடிநீர் விநியோக வேலைத் திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 மணிக்கு யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் தலைமையில் யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.குடாநாட்டு மக்களுக்குத் தூய்மையான குடிநீரை இரணைமடுவிலிருந்து பெற்றுக் கொள்ளும் வகையில் திட்டமிடப்பட்டுள்ள இந்த வேலைத் திட்டத்தின் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ளன.

இந் நிலையில் குறித்த வேலைத்திட்டத்தை அமுலாக்குவது தொடர்பாக இந்தக் கலந்துரையாடல் (16 ஆம் பக்கம் பார்க்க)

## நாடு பூராகவும் அடுத்த வருடம் சனத்தொகை மதிப்பிடப்படும்

### புள்ளிவிபரத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

நாடு பூராகவும் அடுத்த வருடம் சனத்தொகை மதிப்பீடு நடைபெறவுள்ளதாக சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிராம சேவகர் பிரிவுகள் அனைத்திலும் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலர்கள், மாவட்ட நிர்வாக அதிகாரிகள், புள்ளி விபரம் சேகரிப்போர் என 80ஆயிரம் பேர் இந் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளி விபரத் திணைக்கள ஊழியர்களுக்கும், சனத் தொகை மதிப்பீட்டுக்கெனத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் விசேட பயிற்சிகள் வழங்கவும் திணைக் (16 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ‘சமாதானத்துக்கான உதைபந்தாட்டம்’ இன்று மாலை அரையிறுதிப் போட்டியில்



மானிப்பாய் இந்துக்கல்லூரி



மட்டக்களப்பு அலிகார்



புத்தளம் சகீரா



சென் சேவியர்

(யாழ்ப்பாணம்)

சென் ஜோன்ஸ் கல்லூரியின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் சமாதானத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன. அரையிறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி, மட்டக்களப்பு அலிகார் கல்லூரி, மன்னார் சென் சேவியர் கல்லூரி, புத்தளம் சகீரா கல்லூரி ஆகிய அணிகள் மோத வுள்ளன.

காலிறுதிப் போட்டியில் தேவராளி இந்துக் கல்லூரியை எதிர்த்து விளையாடிய மானிப் பாய் இந்துக்கல்லூரி அணி 0–2 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. மட்டக்களப்பு அலிகார் கல்லூரி அணி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை 7–1 என்றகோல் கணக்கில்வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

வெரிசிங்க கல்லூரியை எதிர்த்து விளையாடிய மன்னார் சென் சேவியர் கல்லூரி தண்டனை உதை மூலம் 2–3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அம்பலாங்கொட சிறி தேவானந்தா கல்லூரியுடன் மோதிய புத்தளம் சகீரா கல்லூரி அணி 1–4 என்ற கோல்கணக்கில் வென்று அரையிறுதிக்குள் நுழைந்தது. இன்று மாலை அரையிறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

*(படங்கள்:– சுரேஸ்)*

## பரிசளிப்புவிழா

(நயினாதீவு)

நயினாதீவு ஸ்ரீ பிடாரி அம்பாள் சனசமூக நிலையம், பிடாரி அம்பாள் வேள்வி தினத்தை முன்னிட்டு நடத்திய 19ஆவது பண்ணிசைப் போட்டியின் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்ச் சிகளும் இன்று சனிக்கிழமை இரவு 9.30 மணிக்கு ஸ்ரீ பிடாரி அம்பாள் சனசமூக நிலை யத்தின் நிகழ்ச்சி அரங்கத்தில் சனசமூக நிலையத் தலைவர் பா.கீதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நயினாதீவு முன்னாள் கிராம சேவையாளர் ம.அம்பிகைபாகன் கலந்துகொள்ளவுள் ளார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர் உரை, பிர தம விருந்தினர் உரை, பரிசளிப்பு வைபவ மும் நற்சான்றிதழ் வழங்கலும் நன்றியுரை என் பனவற்றுடன் கலைநிகழ்வாக இராஜராகம் கீத ம்ஸ் இன்னிசை கானம் இடம் பெறும். (ச–3)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(மண்டைதீவு)

மண்டைதீவில் கடற்றொழிலுக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மண்டைதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் அருளேந்திரன் (வயது 42) என்ற குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டவ ராவார்.

நேற்றுக்காலை கடற்றொழிலுக்கு சென்ற இவரை காணாது உறவினர்கள் தேடிச் சென்ற போது பிற்பகல் 3 மணியளவில் சடல மாக மீட்கப்பட்டுள்ளார். இவரது சடலம் யாழ்ப் பாணப் பொலிஸாரினால் நேற்றிரவு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்டது. (எ)

## இலவச இரத்த பரிசோதனை

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை வைத்திய நிலையத்தில் இன்று காலை 8 மணி முதல் இலவச மருத் துவ முகாம் நடத்தப்படவுள்ளது.

இதில் சகல வகையான நோய்களுக் குமான இரத்தப் பரிசோதனை செய்யப்படவுள் ளது. இம் முகாமில் வைத்தியர் காந்தநேசன் தலைமையிலான வைத்தியர் குழுவினர் மேற் கொள்வர். (ச–27)

## ஆனையிறவில் வாகன விபத்து; பொறியியல் பீட மாணவன் பலி!

### சகோதரன் யாழ். வைத்தியசாலையில்

(கிளிநொச்சி)

பேராதனை பல்கலைக்கழக பொறியி யல் பீட மாணவன் ஒருவர் ஆனையிறவில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இடம் பெற்ற விபத்தொன்றில் பலியானார்.

அவரது சகோதரன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொறியியல் பீட 2ஆம் வருட மாணவ னான கிளிநொச்சி திருவையாற்றைச் சேர்ந்த சண்முகம் சுஜீவன் என்பவரே மரணமானவ ராவார்.

சில்லு வெடித்து லொறி ஒன்று சரிந்த போது மோட்டார் சைக்கிளில் சென்ற இவர்கள் மாட்டிக்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. சம் பவ இடத்திலேயே பொறியியல் பீட மாணவன் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

காயங்களுடன் தப்பிய அவரது சகோ தரன் கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளார். (ச–5)

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படவில்லை

### பிரகாஷ் காரத் குற்றச்சாட்டு

மீளக் குடியமர்ந்த மக்களுக்கான புனர் வாழ்வு நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ளவில்லை என இந்திய மார்க்சிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

சென்னையில் நேற்று இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வு என்ற தலைப்பில் நடை பெற்ற கருத்தரங்கில் நிறைவுரையாற்றிய அக்கட்சியை சேர்ந்த பிரகாஷ் காரத் மேற்கண்ட வாறு கூறினார் மார்க்சிஸ்ட் கட்சியின் வட தென் சென்னை மாவட்டக்குழுக்கள் இணைந்து இந்தக் கருத்தரங்கை நடத்தின.

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் மிகப் பெரும் துன்பங்களை அனுபவித்துள்ளனர். ஏராளமானோர் உயிரிழந்தார்கள். மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழ்ந்தார்கள். போர் முடிந்து ஓராண்டு ஆன பிறகும் இன்னமும் இரண்டு இலட்சம் பேர் முகாம்களிலேயே வைக்கப் பட்டு இருக்கிறார்கள் என்பது கண்டிக்கத்தக் கது என்றார் அவர்.

இலங்கை அரசு இவ்வாண்டு ஜனவரிமாத இறுதிக்குள் முகாம்களில் உள்ள அனைத்து தமிழ் மக்களும் அவர்களது சொந்த ஊர்களில் குடியேற்றப்படுவார்கள் என்று வாக்குறுதி அளித் திருந்தது. ஆனால் இப்போது மேலும் மூன்று மாத காலம் அவகாசம் தேவை எனக் கூறுகிறது.

இலங்கை அரசு உடனடியாக மேற் கொள்ள வேண்டி பணிகள் குறித்து குறிப் பிட்ட அவர், முகாம்களில் உள்ள தமிழர்கள் உடனடியாக அவர்அவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும். போரினால் நாசமடைந்த அவர்களது வீடுகளை மீண்டும் கட்டித்தர வேண்டும் அவர்களது வாழ்வாதாரங் கள் உறுதிப்படுத்தபபட வேண்டும் என்றார்.

இதுவரை நடந்துள்ள மறுவாழ்வுப்பணி கள் ஐ.நா., உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற பன்னாட்டு அமைப்புக்களின் நிதியைக்கொண்டே நடந்துள்ளன. எனவே மறுவாழ்வு பணிகள் முழுமையாக மேற் கொள்ளப்படுவதை இந்தஅமைப்புக்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார். (ச–5)

## மகோற்சவம்

(வண்ணார்பண்ணை)

வண்ணார்பண்ணை வட கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வரு டாந்த பெரு விழா எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம் பமாகி நடைபெறவுள்ளது.

இம் மகோற்சவ பெருவிழாவில் 13 ஆம் திகதி கைலாச வாகனம் ,17 ஆம் திகதி சப்பற உற்சவம் 18 ஆம் திகதி இரதோற்சவமும், 19 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (ச–3)

## ஓராண்டு நினைவு விழா

(கைதடி)

கைதடி தெற்கு சனசமூகநிலையத்தினூ டான சமூக முன்னெடுத்தல் குழுவின் ஓராண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு சனசமூக கலையரங்கில் நடைபெறும்.

கிருஷ்ணபிள்ளை ஜெயராம் தலைமை யில் நடைபெறும் இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப் பாளர் திருமதி ஆர்.ரகுநாதன், தென்மராட்சி பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத் தர் திருமதி செல்வராணி ஜெகதீஸன் ஆகி யோர் பிரதம விருந்தினராக கலந்து கொள் கின்றனர். (ச)

## தொல்புரம் விக்னேஸ்வரா கிண்ணத்தை சுவீகரித்தது

(வட்டுக்கோட்டை)

மேரி எலியாஸ் வலைப்பந்தாட்ட வெற்றிக் கிண்ணத்தை தொல்புரம் விக்னேஸ்வரா வித் தியாலய அணி சுவீகரித்தது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுத்துறையினரால் 13 வயதுப்பிரி வினருக்காக நடத்தப்பட்ட மேரி எலியாஸ் வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை தொல் புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம் 12–8 என்ற புள்ளிகளினடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது.

மேற்படி போட்டியில் யாழ்ப்பாணக்கல் லூரி 2ஆம் இடத்தையும் வட்டு.மத்திய கல்லூரி 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள் ளன.

வெற்றிபெற்ற அணிகளுக்கு யாழ்ப்பா ணக் கல்லூரி முதல்வர் என்.ஏ.விமலேந்தி ரன் வெற்றிக்கிண்ணங்களைவழங்கிக் கௌர வித்தார். (ச–27)

## இருபது–20 கிரிக்கெட் போட்டி

(வடமராட்சி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத் தின் வருடாந்த விளையாட்டுவிழாவைமுன் னிட்டு வடமராட்சி விளையாட்டுக் கழகங் களிடையே நடைபெற்று வரும் இருபது–20 மென்பந்தாட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று காலை 8 மணிக்கு பருத்தித்துறை சென்.தோமசை எதிர்த்து கம்பர் மலை யங் கம்பன்ஸ் அணியும், பிற்பகல் 3 மணிக்கு பருத் தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர் கரணவாய் விபுலானந்தா விளையாட்டுக்கழ கமும் மோதவுள்ளன. (ச–24,3)

# 1 ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் கந்தையா சாமி

(K.S. அம்பாள் மினிபஸ் உரிமையாளர்)

தோற்றம்
01.11.1934

மறைவு
09.06.2009



அன்பெனும் சொல்லின்
மறுவடிவம் நீரே—அப்பா
தோள் மேல் எமைச் சுமந்து
சோறூட்டி ஆளாக்கி
பாரினில் நாம் வளர
பண்பாக வழிகாட்டி—இன்று
எமை தனிமையில் விட்டு விட்டு
எங்கே தான் சென்றீரோ?
ஓராண்டு சென்றாலும்
ஒளி விளக்கே உமது முகம்
எம் நெஞ்சத்தில் என்றென்றும்
நிலையாக வாழ்ந்திருக்கும்!


எமது குடும்பத் தலைவரின் ஓராண்டு திவச கிரியைகள் இன்று (29.05.2010) சனிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

1/5, 2ஆம் ஒழுங்கை,
பலாலி றோட்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(1584)



திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட திக்கம் பாலர் பாடசாலை ஆக்கத்திறன் கண்காட்சி அண்மையில் திக்கம் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சிதம்பராக் கல்லூரி அதிபர் கே.கிருஷ்ணகுமார் நாடாவெட்டி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், விருந்தினர்கள் கண்காட்சியினைப் பார்வையிடுவதையும், சனசமூக நிலையத்தலைவர் கு.தினேஸ் மற்றும் நிலைய செயலாளர் தா.வாகீசன் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# வீட்டின் மதிலை உடைத்துக் கொண்டு கிணற்றுக்குள் தாவிய கனரக வாகனம்

## நெல்லியடியில் சம்பவம்




(கரவெட்டி)

பருத்தித்துறை வீதி நெல்லியடிச் சந்தியிலுள்ள வீடொன்றின் மதிலுடன் தென்னிலங்கையிலிருந்து வந்த கனரக வாகனமொன்று மோதி விபத்துக்குள்ளானதில் வாகன சாரதியும் உதவியாளரும் உயிர் தப்பியுள்ள சம்பவமொன்று நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் குறித்த வாகனத்தின் முற்பகுதி சேதமடைந்துள்ளதுடன் வாகனம் வீட்டின் மதிலை உடைத்துக்கொண்டு கிணற்றுக்குள் புதைந்துள்ளது.

இச்சம்பவத்திற்கு வாகனச் சாரதியின் அசமந்தப் போக்கே காரணம் எனக் குறிப்பிடப்படுகிறது.

மேலும் குறித்த சாரதியும் உதவியாளரும் தென்னிலங்கையைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (6-24)

# விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க ஆதரவுடனான கலைவாணி சனசமூக நிலைய வத்தனை மழலைகள் கல்விப் பூங்கா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வத்தனை ஞான வைரவர் கோவில் அருகாமையில் அமைந்துள்ள மைதானத்தில் வத்தனை மழலைக் கல்வி பூங்கா பெற் றோர் மற்றும் ஆசிரியர் சங்கத் தலைவர் நா.சோதிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/ தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை அதிபர் கா.ராமஜயம் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினர்களாக சதாவதானி ஐ.நா.சி.வ.கூ.சங்கத் தலைவர் சோ.கங்காதரன், புலோலி மத்தி கிராம சேவையாளர் அ.உமாசங்கர்,புலோலி மேற்கு கிராம அலுவலர் எஸ்.லம்போதரன்,சதாவதானி க.ச.ச.நிலைய தலைவர் கி.குகநாதன், வடமராட்சி நல்லொழுக்க நிறுவன இணைப்பாளர் ஆ. குலநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6-4)




# வள்ளுவர் இல்ல மாணவர்களுக்கு வட்டு பொலிஸாரால் கற்றல் உபகரணம் அன்பளிப்பு

(வட்டுக்கோட்டை)

வெசாக் தினத்தன்று வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய உத்தியோத்தர்களினால் வட்டுக்கோட்டை தாவளையில் அமைந்துள்ள வள்ளுவர் சிறுவர் இல்ல பிள்ளைகளுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

மேற்படி பொருட்களை வட்டு. பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதயபால மற்றும் சப் இன்ஸ்பெக்டர் அபேயரத்ன மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேரடியாகச் சென்று வழங்கியதோடு மாணவர்களுக்கு இனிப்புப் பண்டங்களையும் வழங்கியும் மகிழ்வூட்டினர். (6-27)

# வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி முடிவுகள்

(கரவெட்டி)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி முடிவுகள் வடமராட்சி கல்வி அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**75 மீற்றர் ஓட்டம்**

அ.அபிநயா - (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), செ.கீர்த்திகா -(கெருடாவில் இ.த.க.), அ.அனுரா -(கொற்றாவத்தை அ.மி.த)

**100 மீற்றர் ஓட்டம்**

அ.அபிநயா- (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), அ.வைஷ்ணவி -(நெல்லியடி மெ.மி.த.க.பா.), தி.தேசிகா -(பரு.சித்திவிநாயகர் வித்தியாலயம்)

**நீளம்பாய்தல்**

நெ. நூர்சிகா - (மணியகாரதோட்ட அ.த.க.), அ.அபிநயா -(உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), அ.அருமிலா -(கரணவாய் தாமோதரா வித்தி.)

**உயரம் பாய்தல்**

சி.அபிநயா - (மணியகாரதோட்ட அ.த.க.), அ .அனற்டிலேனிகா-(சென்தோமஸ் றோ.க.த.), ரு.கீர்த்திகா -(தும்பளை சிவப்பிரகாச வித்தி.)

**11 வயதுப் பிரிவு - ஆண்கள்**

**75 மீற்றர் ஓட்டம்**

மு.ஆர்த்திகன் -(உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்), வ.ரவிவர்மன் -( கொற்றாவத்தை அ.த.க.),சி.பானுஜன் - (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்)

**100 மீற்றர் ஓட்டம்**

வ.ரவிவர்மன் (கொற்றாவத்தை அ.த.க.), இ.நிக்சன் -(உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்), ச.கிசோக் -மணியகார தோட்டம் அ.த.க.)

**நீளம் பாய்தல்**

ர.அம்சன், ம.நந்துயன் -(மணியகார தோட்டம் அ.த.க.), ந.சரத்-(கொற்றாவத்தை அ.த.க.)

**உயரம் பாய்தல்**

ப.பவதனுசன் - (தொண்டைமானாறு வீரகத்தி ), தி.செல்வரதன் -(கம்பளை வித்தியாலயம்), ச.கிசோக் -(மணியகார தோட்டம் அ.த.க.)

**13 வயதுப் பிரிவு -பெண்கள்**

**100 மீற்றர் ஓட்டம்**

சி.ஆரணி-(உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இ.நளினா -(தேவரையாளி இந்துக் கல்லூரி), இ.வசிக்கா -(குடத்தனை அ.த.க.)

**200 மீற்றர் ஓட்டம்**

சி.ஆரணி - (உடுப்பிட்டி மகளிர் க லூரி), நி.ஷஜந்தா - (குடத்தனை அ.த.க.), இ.நளினா- (தேவரையாளி இந்துக் கல்லூரி)

**நீளம்பாய்தல்**

சி. ஆரணி-(உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), அ.பிரியதர்சினி- (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), இ.பிரியவர்ணா- (நெல்லியடி மத்திய மகா வித்தி),

**உயரம் பாய்தல்**

இ.பிரியவர்ணா- (நெல்லியடி மத்திய மகாவித்தி.), இ.கிருத்திகா -(புற்றளை மகா வித்தியாலயம்),வ.சௌந்தர்யா - (நெல்லியடி மத்திய மகாவித்தி.) (தொடரும்)

# 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக்கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக் கழகத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக் கூட்டமும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இல 16/2, சீனியர்லேன், கலட்டி, யாழ்ப்பாணம் எனும் முகவரி யில் அமைந்துள்ள நிறுவன மண்டபத்தில் விளையாட்டுக் கழகத் தலைவர் கெ.பிரகாஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சந்திரகுமார் முருகேசு ஆகியோர் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக யாழ் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் எஸ்.ஏ.அருள்முருகன், சிறப்பு விருந்தினர்களாக H.S.O தலைமை அதிகாரி நியோன் சோபியா, யாழ்.கொமர்ஷல் வங்கி சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.இரவீந்திரா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து உறுப்பினர்களுடனான கலந்துரையாடல், பரிசில் வழங்கல் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (6-4)

# இன்று ஒரு தகவல்

## அறிவால் வரும் ஆபத்து

குருவின் எதிரில் சீடர்கள் உட்கார்ந்திருந்தார்கள் குரு பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

சீடர்களுக்கு ஒரு ஆசை அதாவது ஒரு முக்கியமான மந்திரத்தை குருநாதரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்பது தான் அவர்களுடைய ஆசை.

அது என்ன மந்திரம் என்றால்... இறந்தவரை உயிர்ப்பிக்கும் புனித மந்திரம்.

அதாவது இறந்தவர்களுக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் மந்திரம்.

'' குருவே , தயவு செய்து அந்த மந்திரத்தை எங்களுக்கு உபதேசிக்க வேண்டும்'' என்று கேட்டார்கள்.

'' அது ரொம்ப ஆபத்தானது. அது என்னத்துக்கு உங்களுக்கு ?'' என்றார் குரு.

''எங்களுடைய நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்காகத்தான் கேட்கிறோம். வேறொன்றுமில்லை'' என்றார்கள் சீடர்கள்.

''பக்குவப்படாத அறிவு ஆபத்தானது'' என்றார் குரு.

இது சீடர்களுக்குப் புரியவில்லை.

''அது எப்படி? பக்குவப்படாத அறிவு ஆபத்தானது என்று சொல்கிறீர்கள். அப்படி என்றால் என்ன?''என்று கேட்டார்கள் சீடர்கள்.

குரு அதற்கு விளக்கம் கொடுத்தார்.

''அந்த மந்திரத்தை எப்பொழுது பயன்படுத்த வேண்டும் என்பதை அறியக்கூடிய ஞானம் ஏற்படும் வரை அதைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பது தான் நல்லது. இல்லையென்றால் ஆபத்து!'' என்றார்.

ஆனால் அந்த சீடர்கள் அதைக் கேட்கும் படியாக இல்லை. பிடிவாதமாக இருந்தார்கள்.

''சரி .... வாருங்கள் சொல்கிறேன்'' என்றார் குரு. எல்லோரும் வந்தார்கள்.

அந்தப் புனித மந்திரத்தை அவர்களுக்கு இரகசியமாக உபதேசித்து விட்டு அவர்களுக்கு எச்சரிக்கையும் கொடுத்தார்.

'' இந்த மந்திரத்தை நன்றாக ஆராய்ந்து பார்த்த பின்னர்தான் உச்சரிக்க வேண்டும். அவசரப்பட்டு ஏதும் செய்து விடக்கூடாது'' என்று பல தடவை எச்சரித்தார்.

சரி என்று சொல்லிவிட்டு அவர்களெல்லாம் மந்திரத்தைக் கற்றுக் கொண்டு எழுந்து போய்விட்டார்கள்.

ஒருநாள் அந்த சீடர்கள் எல்லோரும் மணற்பாங்கான இடத்தில் நடந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

ஓரிடத்தில் எலும்புக் குவியலாக கிடந்தது. உடனே இந்த சீடர்கள் முன் பின் யோசிக்காமல் தியானமும் செய்யாமல் மந்திரத்தின் பயனைச் சோதித்துப் பார்க்க எண்ணி... அந்த மந்திரத்தை உச்சரித்தார்கள். அவ்வளவுதான்!

உடனே அந்த எலும்புகளெல்லாம் ஓநாய்களாக மாறி அவர்களைத் துரத்த ஆரம்பித்தது.

சீடர்கள் எல்லோரும் தலை தெறிக்க ஓடினார்கள். ஓநாய்களும் விடாமல் துரத்தின. அவர்களைப் பிடித்துக் கடித்துக் குதற ஆரம்பித்தன.

''அப்பொழுது தான் சீடர்களுக்கு குரு சொன்ன அறிவுரையின் அர்த்தம் புரிந்தது.

"பக்குவப்படாத அறிவு ஆபத்தானது" என்பது. அதனால இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவெனில்,

நாம் அறிவை வளர்த்துக் கொண்டால் மட்டும் போதாது. அந்த அறிவை எப்பொழுது எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்கிற பக்குவமும் நமக்கு வர வேண்டும்.

அப்பொழுது தான் வாழ்க்கை நல்லபடியாக அமையும். இல்லையெனில் இடைஞ்சல் தான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## வலி. தெற்கு பிரதேசசபைக்குட்பட்ட கொத்தணிகளுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத்திட்ட நான்காண்டு அபிவிருத்தித் திட்டத்தின் (நெல்சிப்) கீழ் முன்னெடுப்பதற்குரிய அபிவிருத்தித் திட்டங்களை பொது மக்கள் இனங்காண்பதற்கும் முன்னுரிமைப்பட்டியலைத் தயாரிப்பதற்கும் வசதி செய்யும் கலந்துரையாடல் வலி.தெற்கு பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதில் உடுவில் பிரிவு-II கொத்தணிக் குட்பட்ட ஜே/182 ,ஜே/183 ,ஜே/184 ,ஜே/187 ,ஜே/185, கிராம அலுவலர் பிரிவுக ளைச் சேர்ந்தோருக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்திலும் ,

சுன்னாகம் பிரிவு II கொத்தணிக்குட்பட்ட ஜே/195 ,ஜே/196 , ஜே/197 ,ஜே/202, ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலயத்திலும்,

உடுவில் பிரிவு I கொத்தணிக்குட்பட்ட ஜே/188 ,ஜே/189,ஜே/190,ஜே/191,ஜே/192 ,ஜே/193, ஜே/194 , ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு எதிர்வரும் 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு இணுவில் அறிவாலயத்திலும் ,

ஏழாலை பிரிவு VI கொத்தணிக்குட்பட்ட ஜே/204,ஜே/207, ஜே/208 ,ஜே/209 ,ஜே/210,ஜே/211 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு எதிர்வரும் 1 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு குப்பிளான் கன்னிமார் கோயிலடி WRDS கட்டிடத்திலும், சுன்னாகம் பிரிவு III கொத்தணிக்குட்பட்ட ஜே/186,ஜே/198,ஜே/199 ,ஜே/200ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு எதிர்வரும் 2 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயத்திலும்,

ஏழாலை பிரிவு V கொத்தணிக்குட்பட்ட ஜே/201,ஜே/203,ஜே/205 ,ஜே/206 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு எதிர்வரும் 3 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஏழாலை மகா வித்தியாலயத் திலும் கலந்துரையாடல்ள் நடைபெறவுள் ளது.

பொதுமக்கள் தமக்குரிய கொத்தணிகளுக்கான கலந்துரையாடல்களில் தவறாது கலந்து கொள்ளுமாறு வலி. தெற்கு பிரதேச சபை செயலாளர் கேட்டுள்ளார். (6-4)

## வடமராட்சியில் நாளை மின்வெட்டு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பிரதேசத்திற்கான மின் விநியோகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் ,வீதி அகலமாக்கும் வேலைக்காக உயர் அழுத்த மின் கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் மின்விநியோகம் குறித்த பிரதேசத்தில் தடைப்படும் என யாழ் பிரதேச மின்பொறியிலாளர் அறிவித்துள்ளார். (4)

## இராசி பலன்

*29-05-2010*
*(வைகாசி 15, சனிக்கிழமை)*
*துதியை பின்னிரவு 5.49 மணிவரை*
*கேட்டை பிற்பகல் 1.51மணிவரை*
*இராகுகாலம் 8.55-10.22 மணிவரை*
*சுபநேரம் 2.52-4..22 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | பிரயாண நன்மை, புதியதிட்டமிடல், முயற்சி தாமதம், எதிர்பாராத செலவு . |
| இடபம் | வீண்பகை , காரியதாமதம், உடல் நலக்குறைவு, வாகன பயம். |
| மிதுனம் | களஸ்திர நன்மை, நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை, தனவருவாய். |
| கடகம் | தொழில் சிந்தை, நோய் குணமடைதல், முயற்சி கைகூடும், திடீர் நன்மை. |
| சிங்கம் | அமைதிக் குறைவு, பணவிரயம், காரியதாமதம், உறவினர் சந்திப்பு. |
| கன்னி | சுபசெலவு, பிரயாண சுகம், உறவினர் சந்திப்பு, நல்ல முயற்சி. |
| துலாம் | சகோதரர் உதவி, நல்ல செய்தி, தொழில் நன்மை, போசன சுகம். |
| விருச்சிகம் | எடுத்த காரியம் தாமதமாகும், கடின வார்த்தை, தனவிரயம், ரோகநிலை. |
| தனுசு | தொழில் நன்மை, தெய்வ நம்பிக்கை, நண்பர்கள் சந்திப்பு, நல்ல முயற்சி. |
| மகரம் | காரிய அலைச்சல், சுப செலவு, போசன சுகம், ஆரோக்கியக் குறைவு. |
| கும்பம் | பெருமையடைதல், தொழில் நன்மை, போசனசுகம், காரியசித்தி. |
| மீனம் | தூரதேசச் செய்தி, முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை, பிறர் உதவி. |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 |
| தக்காளி | 120 | 140 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 30 |
| கோவா | 80 | 100 | 85 |
| கரட் | 150 | 160 | 130 |
| பூசனி | 50 | 60 | 40 |
| புடோல் | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 45 |
| சின்ன வெங்காயம் | 100 | 110 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 70 |
| பாகற்காய் | 100 | 120 | 90 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 40 |
| பயற்றங்காய் | 140 | 160 | 140 |
| லீக்ஸ் | 120 | 140 | 130 |
| பீற்றூட் | 80 | 100 | 60 |
| கறிமிளகாய் | 180 | 200 | 100 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 200 |
| போஞ்சி | 180 | 200 | 180 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 55 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 35 |
| தேசிக்காய் | 120 | 140 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# ஈழத் தமிழரின் அவலத்தை மறக்கவே இலங்கையில் சர்வதேச திரைப்படவிழா

## கவிஞர் தாமரை தெரிவிப்பு



சர்வதேச இந்தியத் திரைத் துறை அகடமியான (International Indian Film Academy) "ஐஃபா" விருது விழா இலங்கைத் தலைநகர் கொழும்பில் ஜூன் முதல் வாரம் நடக்கவிருக்கிறது. இலங்கைத் தமிழ்த் திரையுலகம் புறக்கணித்திருக்கிறது. இதற்குப் பின்னணியில் இருந்த முக்கியமானவர்களில் ஒருவர் கவிஞர் தாமரை.

"கொழும்பு விழாவைக் கண்டித்து கடந்த 23ஆம்திகதி கமலஹாசனின் அலுவலகம் முன்பு 'மே17' இயக்கத்தினர் முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.தமிழ்த் திரையுலகில் என்னதான் நடக்கிறது?"

"தமிழ்த் திரையுலகைப் பொறுத்தவரையில், இனப்படுகொலை செய்த சிங்கள அரசின் மீது கடும் கோபத்தில் இருக்கிறோம். தமிழீழத்தில் போர்க் குற்றத்தைச் செய்தவனைத் தண்டித்தே ஆகவேண்டும் என்ற நிலையில், அங்கு சர்வதேச இந்தியத் திரை விருது விழா நடத்துவதை எங்களால் ஜீரணிக்க முடியவில்லை. ஃபெப்சி தலைவர் குகநாதன், தயாரிப்பாளர் சங்கத்தலைவர் ராம.நாராயணன்; நடிகர் சங்கப் பொதுச் செயலாளர் ராதாரவி ஆகியோரிடமும், வெளிநாட்டில் இருந்து திரும்பிய நடிகர் சங்கத் தலைவர் சரத்குமாரிடமும் பேசினேன்.

அவர்களும் அதே உணர்வுடன் கூட்டம் நடத்தி, கடுமையான வாசகங்களுடன் கண்டனத் தீர்மானம் இயற்றினர். அதோடு, வட இந்தியத் திரையுலகமும் இந்த விழாவை புறக்கணிக்கவேண்டும் என அவர்களுக்கு முறைப்படி கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது.

"முற்றுகைப் போராட்டத்துக்குப் பிறகுதான், கொழும்பு விழாவைப் புறக்கணிப்பதாக கமல் அறிவித்துள்ளார். இதை முன்பே அவர் சொல்லியிருக்கலாம் என்று கூறப்படுகிறதே...?"

"இதுபற்றி கமல்ஹாசன் சாரையும் சந்திக்க முயற்சித்தேன். அவர் அப்போது பிரான்ஸில் இருந்தார். அதனால், அவரைச் சந்திக்க முடியவில்லை. அவர் திரும்பியதும் தன் உதவியாளர் மூலமாக என் மீது வருத்தப்பட்டதாகச் சொல்லி,

ஒரு வருடத்துக்கு முன்பே ஈழத் தமிழர்களுக்காக நான் கருத்தை வெளிப்படுத்தி இருந்தேன். இந்த நிலையில், கவிஞர் இது தொடர்பாக என்னிடம் வேண்டுகோள் வைக்க வேண்டியதே இல்லையே என்றார்.

"உலகச் செம்மொழி மாநாடு கோவையில் விரைவில் நடக்க இருக்கிறதே?"

"ஈழத் தமிழ் மக்களுக்கு பெரிய அவலம் நடந்திருக்கிறது. தமிழினமே பெரும் சோகத்தில் மூழ்கியிருக்கிறது. பேரழிவின் கோரம் முடிந்து ஓர் ஆண்டுத் துயரத்தில் உலகத் தமிழ் மக்கள் வெந்துகொண்டு இருக்கும்போது, யார் இந்த மாநாட்டை நடத்த வேண்டும் என்று கேட்டார்கள்? போர் நடந்த காலத்தில், ஆளும் தரப்பில் என்ன தீர்மானம் கேட்டார்களோ...அதைச் செயல்படுத்த அவர்கள் ஏதாவது செய்யட்டும். ஈழப் போரில் ஏற்பட்ட பெரும் அவப்பெயரில் இருந்து திசை திருப்பத்தான் இந்த மாநாடு நடத்தப்படுகிறது"

"ஈழத்தமிழருக்காக திரையுலகை ஒன்று சேர்த்ததுபோல கோவை மாநாடு தேவை இல்லை என தமிழ்த் திரையுலகில் கூட்டு முயற்சி, போராட்டம் இருக்குமா?"

"ஈழப்பிரச்சினை என்பது வேறு... இது வேறு. கோவையில் நடக்கப்போவது அரசாங்கத்தின் மாநாடு,ஆளும் தரப்பின் மாநாடாகத்தான் இருக்கும்.இதை என்னைப் போன்ற உணர்வாளர்கள் தனிப்பட்ட வகையில் விமர்சனம் செய்யலாம். திரையுலகின் பெரிய அமைப்புக்கள் ஆளும் கட்சியைப் பகைக்க விரும்பமாட்டார்கள் தானே!"

"நளினியை விடுதலை செய்ய வேண்டும் என கையெழுத்து இயக்கம் தொடங்கினீர்கள். முதலமைச்சரிடம் கூடப் பேசினீர்கள். ஆனால், அந்தக் கோரிக்கை தமிழக அரசால் நிராகரிக்கப்பட்டு விட்டதே?"

"நளினி விவகாரத்தைப் பொறுத்த வரை

**ஜூனியர் விகடன்**

மனித உரிமை, மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் தான் நான் ஆரம்பம் முதலே குரல் கொடுத்துவருகிறேன்.ராஜீவ் படுகொலையில் தப்பான இடத்தில், தப்பான ஆட்களுடன், தப்பான நேரத்தில் இருந்தார் என்பது தான் நளினி போன்றவர்கள் செய்த பிழை. இதை நான் சொல்லவில்லை. உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் சொல்லப்பட்டு இருக்கிறது.

நளினி விவகாரம் தொடர்பாக முதலமைச்சரைச் சந்தித்தபோது நளினியை விடுதலை செய்வதில் எனக்கென்ன ஆட்சேபனை? சோனியாவிடம் கோரிக்கை வையுங்கள் என்றார். இதில் மாநில அரசுதான் முடிவெடுக்க வேண்டும் என்று மத்திய அரசு சொல்லிவிட்டது. கொடுத்த வாக்கை அவர் காப்பாற்றுவார் என்று எதிர்பார்க்கிறேன்.

வெளிநாட்டு ஈழத் தமிழர்கள் தரப்பில் புலிகள் இயக்கத்தில் இருந்தவர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிந்து செயல்படுவதாகக் கூறப்படுகிறதே?

நாடு கடந்த தமிழீழ அரசு என்ற அமைப்பில் ஜனநாயக முறையில் தேர்தலை நடத்திக் காட்டியிருக்கிறார்கள். எல்லாம் முடிந்தது. இதெல்லாம் சாத்தியம் இல்லை என்றும் சொல்கிறார்கள். இதைச் செயல்படவிடுவோம். பிறகு அதில் குறைகள் இருந்தால் தட்டிக் கேட்போம் என்பதுதான் என் கருத்து. எனவே நாடு கடந்த தமிழீழ அரசு என்ற ஜனநாயக அமைப்பை உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் வலுப்படுத்த வேண்டும்.

ஐஃபா விழாவைப் பயன்படுத்தி சுற்றுலாவை மேம்படுத்த இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது. தமிழ் மக்களைக் கொன்றுவிட்டு நற்சான்று பெறுவதற்காக நடத்தப்படும் ஐஃபா பட விழா போன்றவற்றை முறியடிக்க இது அவசியமானதாகும். உலக அளவில் இலங்கை அரசைத் தனிமைப்படுத்த வேண்டும். இதைச் செய்வதற்கு நாடு கடந்த தமிழீழ அரசு போன்ற அமைப்பு அவசியம்.

ஈழ கோஷத்தோடு உதயமாகியிருக்கும் சீமானின் கட்சி பற்றி...? காங்கிரஸை எதிர்த்து சுயமரியாதை இயக்கம் உருவான போது என்ன தேவை இருந்ததோ.... அதுபோல இன்று தேவை இருக்கிறது. இந்தத் தேவை இல்லாமல் யாரும் உருவாகிவிட முடியாது. ஊழலை ஒழிப்பேன், வீட்டுக்கு ரேசன் அரிசி வரும் என்று விஜயகாந்த் கூறியதற்கும் இந்த அடிப்படையில் தான் வரவேற்பு கிடைத்தது.

ஈழப்போரின் கடைசிக் கட்டத்திலும் களத்தில் இருந்த பிரபாகரன் தன்னைப் பற்றிய கவலை இன்றி எனக்குப் பிறகு யாராவது வருவார்கள் என்று சொல்லி இருக்கிறார். இந்திய இறையாண்மையின் முகமூடி கிழிந்துவிட்டது. தமிழ்த் தேசியத்தின் தேவை சீமானின் இயக்கத்தை உருவாக்கி இருக்கிறது.

இலங்கையில் விருது வழங்கும் விழாவுக்கான எதிர்ப்பை அடுத்து உங்கள் அடுத்த கட்டப் போராட்டம் என்ன?

தமிழ் மக்களைக் கொன்றொழித்துவிட்டு ஒன்றும் நடவாததுபோல இருக்க இலங்கை அரசு முயல்கிறது. இதை இப்படியே விட்டுவிட முடியாது. இவ்வளவுக்கும் பிறகும் இலங்கை அரசுத் தரப்பில் திரை உலகினரைத் தனிப்பட்டரீதியில் தொடர்புகொண்டு வசப்படுத்த முயற்சிகள் நடக்கின்றன. இந்த ஐஃபா விழாவில் கலந்துகொள்ளுமாறு ரஜினிகாந்த்துக்கு ஜனாதிபதி ராஜபக்ஷ தூதுவிட்டிருக்கிறார்.

ஆனால் ரஜினி அதை வந்த வேகத்தில் நிராகரித்துவிட்டார் என்று தகவல் கிடைத்துள்ளது. எனவே நாம் தொடர்ந்து விழிப்பாக இருக்கவேண்டி இருக்கிறது. அடுத்து இலங்கைக்குப் படப்பிடிப்புக்காக யாரும் செல்ல வேண்டாம் என்ற பிரசாரத்தில் ஈடுபடத் திட்டம் என்று முடித்தார் தாமரை.

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் செயலுக்கு இன்னர் சிட்டி பிரஸ் விளக்கம் கோரியுள்ளது

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை செயலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பை புறக்கணித்தது தொடர்பில் சர்ச்சைகள் எழுந்துள்ளன.

இது தொடர்பில் விளக்கம் கோரி, ஐக்கிய நாடுகள் சபையின் அனுமதிக்கப்பட்ட பத்திரிகையான இன்னர் சிட்டி பிரஸ் இலங்கைத் தூதரகத்திற்குக் கடிதம் அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள யுத்தக் குற்றச்சாட்டுக்களுக்கான விளக்கங்களையும் இன்னர் சிட்டி பிரஸ் கோரியுள்ளது.

இதேவேளை, அண்மையில் பான்கீ மூனுக்கு ஜீ.எல்.பீரிஸிக்கும் இடையிலான சந்திப்பின்போது, இன்னர் சிட்டி பிரஸ் அனுமதிக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இந்த சந்திப்பில், ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைஅதிகாரி விஜய் நம்பியார், ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி பாலித ஹோகன்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

எனினும் இதன்போது புகைப்படம் எடுக்கவோ, கலந்துகொள்ளவோ இன்னர் சிட்டி பிரசுக்கு அனுமதிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (6)

## அ'புரத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலி

(கொழும்பு)

அனுராதபுரத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அனுராதபுர கலாவ வீதியில் முச்சக்கர வண்டியொன்றும் கொள்கலன் வண்டியொன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மேலும் எட்டு பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பத்து வயது சிறுவன் ஒருவனும் அவரது பெற்றோருமே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

முச்சக்கர வண்டி ஒன்றில் பத்து பேர் பயணித்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (6)

## இலங்கை, ஆப்கானிஸ்தான் அகதிகளை அவுஸ். அடக்குமுறைக்கு உட்படுத்துகிறது

### சர்வதேச மன்னிப்பு சபை குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அகதிகளை அவுஸ்திரேலியா துஷ்பிரயோகம் செய்து வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியுள்ளது.

அரசியல் தஞ்சம் கோரி சரணாகதி அடையும் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அகதிகளை அவுஸ்திரேலியா துஷ்பிரயோகம் செய்து வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆண்டறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

உலகின் 159 நாடுகளில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அகதிகள் தொடர்பில் அவுஸ்திரேலியா சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு அமைவான முறையில் செயற்படவேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

சரணாகதி கோரும் மக்களுக்கு அடைக்கலம் வழங்க வேண்டிய பொறுப்பு அவுஸ்திரேலியாவிற்கு இருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது. (6-4)

# மலேசியாவில் மூன்றாவது நாளாக இலங்கை தமிழர்கள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

மலேசியாவில் தொடர்ந்தும் மூன்றாவது நாளாக இலங்கைத் தமிழர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அகதி அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமெனவும், சர்வதேச உரிமை அமைப்புக்களுடன் தொடர்பு ஏற்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமெனவும் கோரி இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படுகிறது.

மீன்பிடிப் படகொன்றில் அவுஸ்திரேலியா நோக்கி பயணித்த 75 இலங்கைத் தமிழர்களை மலேசிய அதிகாரிகள் அண்மையில் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கோலாலம்பூர் விமான நிலையத்திற்கு அருகாமையில் உள்ள முகாமொன்றில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் 50 இற்கும் மேற்பட்ட ஆண்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக மலேசிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இலங்கை, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து அவுஸ்திரேலியா செல்வதற்கு மலேசியாவை அநேகமானவர்கள் பயன்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

## இந்திய திரைப்படவிழாவுக்கு

# 8 பொலிஸ்மா அதிபர்கள் தலைமையில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

(கொழும்பு)

இலங்கையில் அடுத்தமாதம் நடைபெறவுள்ள சர்வதேச இந்திய திரைப்படவிருது விழாவுக்கு பிரதி பொலிஸ்மா அதிபர்கள் எட்டுப்பேர் தலைமையில் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

அடுத்த மாதம் நடைபெறவுள்ள சர்வதேச இந்திய திரைப்படவிருது விழாவுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முக்கியமாக பிரதி பொலிஸ்மா அதிபர்கள் எட்டுப்பேர் தலைமையில் குறித்த விழாவுக்கு பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது. விருதுவிழாவில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்படும். அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதாவது கொழும்பு நகருக்கு வருகை தரும் பொதுமக்களுக்கு தடைகள் ஏற்படாதவாறே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றார். (6-4)

# நெடுங்கேணி பிரதேசத்தில் ரூ.100 மில். செலவில் நீர் விநியோகத் திட்டம்

வவுனியா மாவட்டத்தின் வடக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நெடுங்கேணி பிரதேசத்தில் நீர் விநியோகத்திற்கென 100 மில்லியன் ரூபா நிதியொதுக்கப்பட்டுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.

இதற்கான நிதியை என்ரிப் எனப்படும் வட பிரதேச அவச்ர மீளமைப்புத் திட்டத்தின் ஊடாக உலக வங்கி வழங்கியுள்ளது.

இதேவேளை இந்தத் திட்டத்தின் கீழ் அரச உத்தியோகத்தர்களுக்கென 30 மில்லியன் ரூபா செலவில் விடுதி அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

மேலும் இப்பிரதேசத்தில் நவீனசந்தை , புதிய பஸ் நிலையம் என்பவற்றை அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதுடன் இதற்கென 43 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் 33 மில்லியன் ரூபா செலவில் இந்தப் பகுதியில் பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கும் நெடுங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கென ஓர் அரிசி ஆலை அமைப்பதற்கும் நெடுங்கேணி பிரதேச மிருக வைத்திய அலுவலகத்தைத் திருத்தி அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் நெடுங்கேணி பிரதேச வீதிகள் 50 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (6)


# மீள்குடியமர்த்தப்படும் மக்களுக்கான வீடமைப்பு பணிகள் மந்தகதியில்

## அமைச்சர்விமல் வீரவன்ச

(கொழும்பு)

வடக்கில் மீள் குடியமர்த்தப்படும் மக்களுக்கான வீடமைக்கும் பணிகள் மிகவும் மந்த கதியிலேயே இடம்பெற்று வருவதை ஏற்றுக் கொண்டுள்ள வீடமைப்பு மற்றும் பொது சேவைகள் அமைச்சர் விமல் வீரவன்ச, இதனால் மக்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்துள்ள மக்களை விரைவாக மீள்குடியமர்த்தவும் வீடுகள் அமைக்கும் பணிகளைத் துரிதப்படுத்தவும் தாம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



வடக்கின் விஜயம் தொடர்பாக நேற்று முன்தினம் கூறுகையிலேயே அமைச்சர் விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில் ,

உள்நாட்டு யுத்தம் காரணமாக வடக்கு மற் றும் கிழக்கு பிரதேசங்களில் மக்கள் குடியிருப் புக்கள் அழிந்து போயுள்ளதுடன் மக்கள் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது வடக்கு மற்றும் கிழக்கில் அமைதிச்சூழல் உருவாகியுள்ளதால் இங்கு கட்டுமானப் பணிகளைத்துரிதப்படுத்தப்பட வேண்டும் என்றார். (6-4)

# 28.05.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 1453 – ஓட்டோமான் படைகள் கான்ஸ்டான்டினோபில் நகரைக் கைப்பற்றி பைசண்டைன் பேரரசை முடிவுக்குக் கொண்டுவந்தனர்.
- 1660 – இரண்டாம் சாள்ஸ் பிரித்தானியாவின் மன்னனாக மீண்டும் முடி சூடினான்.
- 1677 – வேர்ஜீனியாவில் குடியேறிகளுக்கும் உள்ளூர் பழங்குடிகளுக்கும் இடையில் அமைதி உடன்பாடு ஏற்பட்டது.
- 1727 – இரண்டாம் பீட்டர் ரஷ்யாவின் மன்னனாக முடி சூடினான்.
- 1780 – அமெரிக்கப் புரட்சிப் போர் சரணடைந்த அமெரிக்கப் போர்வீரர்கள் 113 பேரை *பனஸ்ட்ரே டார்லெட்டன்* தலைமையிலான படைகள் கொன்றனர்.
- 1790 – ரோட் தீவு ஐக்கிய அமெரிக்காவின் 13 ஆவது மாநிலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- 1848 – விஸ்கொன்சின் ஐக்கிய அமெரிக்காவின் 30 ஆவது மாநிலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- 1864 – மெக்சிக்கோவின் முதலாம் மாக்சிமிலியன் முதற்தடவையாக மெக்சிக்கோ வந்து சேர்ந்தான்.
- 1867 – ஆஸ்திரிய – ஹங்கேரிப் பேரரசு அமைக்கப்பட்டது.
- 1869 – பிரித்தானியாவில் பகிரங்க மரணதண்டனை தடை செய்யப்பட்டது.
- 1886 – வேதியியலாளர் ஜோன் பெம்பர்ட்டன் முதற் தடவையாக கொக்கக் கோலாவுக்கான விளம்பரத்தை அட்லாண்டா ஜேர்னல் இதழில் வெளியிட்டார்.
- 1903 – சேர்பியாவின் மன்னன் அலெக்சாண்டர் ஒப்ரெனோவிச் மற்றும் அராசி திராகா இருவரும் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1914 – புனித லோரன்ஸ் வளைகுடாவில் எம்ப்ரெஸ் ஒஃப் அயர்லாந்து என்ற அயர்லாந்து பயணிகள் ஆடம்பரக் கப்பல் மூழ்கியதில் ஆயிரத்து 24 பேர் கொல்லப்பட்டனர்.
- 1919 – ஐன்ஸ்டீனின் சார்புக் கோட்பாடு சோதிக்கப்பட்டது. பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டது.
- 1947 – இந்தியத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 1953 – முதற்தடவையாக சேர் எட்மண்ட ஹிலாரி, ஷேர்ப்பா டென்சிங் இருவரும் எவரெஸ்ட் சிகரத்தை ஏறி சாதனை படைத்தனர்.
- 1972 – டெல் அவிவ் விமான நிலையத்தில் மூன்று ஜப்பானியர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் 26 பேர் கொல்லப்பட்டனர்.
- 1982 – மட்டக்களப்பில் சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- 1985 – பெல்ஜியத்தில் ஐரோப்பிய கால்பந்தாட்டப் போட்டி ஒன்றில் இடம்பெற்ற கைகலப்பில் மைதானத்தின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்ததில் 39 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.
- 1988 – அமெரிக்க அதிபர் றொனால்ட் ரேகன் முதற்தடவையாக சோவியத் ஒன்றியத்துக்கு விஜயம் செய்தார்.
- 1990 – போரிஸ் யெல்ட்சின் ரஷ்யக் குடியரசின் அதிபரானார்.
- 1999 – டிஸ்கவரி விண்ணோடம் சர்வதேச விண்வெளி நிலையத்துடனான தனது முதலாவது இணைப்பை வெற்றிகரமாக முடித்தது.
- 1999 – 16 ஆண்டுகள் இராணுவ ஆட்சியின் பின்னர் நைஜீரியாவில் அதிபரை மக்கள் தெரிவு செய்தனர்.
- 2005 – ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தீவிரவாத அமைப்பாக அறிவித்துத் தடை செய்தது.

**பிறப்புகள்**

- 1917 – ஜோன் எஃப் கென்னடி ,ஐக்கிய அமெரிக்காவின் 35 ஆவது குடியரசுத் தலைவர்.
- 1984 – கார்மெலோ ஆந்தனி அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்.


**இறப்புகள்**

- 1500 – பார்த்தலோமியூ டயஸ் போர்த்துக்கேய நாடுகாண் பயணி.
- 1892 – பஹாவுல்லா, பஹாய் மத தாபகர்.
- 1987 – சரண் சிங், இந்தியக் குடியரசின் ஏழாவது பிரதமர்.
- 1994 – எரிக் ஹோனெக்கர், கிழக்கு ஜேர்மனியின் கடைசி அதிபர்.


**சிறப்பு நாள்**

- நைஜீரியா – மக்களாட்சி நாள் (1999).

1872 – ஈழத்துச் சித்தர் சிவயோக சுவாமி அவதரித்தார். (இறப்பு. 1964)



# நெற்பீடைகளும் முகாமைத்துவமும்



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

10-XVIII

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



இது இன்னொன்றினை ஞாபகப்படுத்துகிறதல்லவா?'' கப்பலும் ஒருநாள் ஓடத்திலேறும், ஓடமும் ஒருநாள் கப்பலில் ஏறும்'' என்னும் கதைபோல எம்பெருமான் விநாயகப் பெருமானுக்கு பிடித்த படையல் அறுகம்புல் படையல். கோர்த்து மாலையாக்கி இறைவனுக்கு அணிவித்து மகிழ்வார்கள்.

இது ஒரு தொழிலாகி, அறுகம்புல் மாலைக்கு கிராக்கியேற்படுவதால் இதனை இப்போது பயிர்செய்ய தலைப்பிட்டுவிட்டார்கள்.

தமிழ்நாட்டில் அறுகம்புல் விளைநிலத்தில் பயிர்செய்யப்பட்டு பணந்தரும் பயிராகியிருக்கிறது. இதில் பயிர்செய்யும் விவசாயிக்கு பணந்தருவதால் மகிழ்ச்சி. எம்பெருமான் விநாயகப் பெருமானுக்கும் நல்ல மாலையாக தினந்தினம் பூசையில் பயன்படுத்தப்படுவதால் இரட்டிப்பு மகிழ்ச்சி. ஒட்டு மொத்தத்தில அறுகம்புல் பயிராகிவிட்டது காணீர். இதற்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல அறுகம்புல் சாறு இப்போது முதன்மைக் குடிநீராகிறது. பணக்காரர்களுக்கு தமது உடலைப் பேணிப் பாதுகாப்பதில் அதீத அக்கறை.

அதனால் விடிகாலை வேளையில் ஆண்களும் பெண்களுமாக வீறுநடை போடுவது வழக்கமாகிவிட்டது. நீரிழிவு, இருதயக்கோளாறுகள், தசைப்பிடிப்பு, வாதம் மற்றும் உணவு தொகுதி கோளாறுகள் என பல வியாதிகளுக்கு நடைப்பயிற்சி சிறந்ததென்பதனால் அதிகாலையில் ஒரு நடை எட்டி நடந்து ஒரு வட்டம் சுற்றி வந்தபின் சுத்தமானதாக தயாரித்து வைக்கப்பட்டிருக்கும் அறுகம்புல் சாற்றில் ஒரு குவளை வெறும் வயிற்றில் குடித்துவிட்டு களை ஆறிச் செல்கின்றனர்.

இதனால் அறுகம்புல் உற்பத்தி ஆங்காங்கே களை கட்டியிருக்கிறது. இதுபோல இங்கும் இல்லையே என ஆதங்கப்படாதீர்கள். அங்கு சென்று தங்கியிருந்து பின் இங்கு வந்தவர் இந்தப் பழக்கத்திற்கு ஆளாகிவிட்டதனால் இங்கும் இம்மாதிரியான நடைப்பயிற்சி மையங்கள், அறுகம்புல் விளைநிலங்களென அறிமுகமாகி விட்டிருக்கின்றது என்பது பிந்திய செய்தி.

*நாய்க்குத் தெரிந்தது எனக் குத் தெரியவில்லை.*

மிருகங்களுள் நன்றியுள்ள மிருகமான நாயார் ஒரு சில நாட்களில் உண்ணாவிரதமிருப்பதை அவதானித்திருப்பீர்கள். அந்த நாட்களில் மாமிசம் இட்டாலும் அதனை உண்பதையோ முகர்ந்து பார்ப்பதையோ தவிர்த்து அறுகம் புல் மாத்திரம் தேடி உண்டு, சில நாட்கள் கழித்து உள்ளுள்ளவற்றை கக்கி அஜீரணக் குறைபாட்டை நிவர்த்தி செய்துகொள்ளும். இவ்வளவு வலிமையுள்ள இந்த அரிய மூலிகை எங்கள் வீட்டு வளவு, தெருவோரம் என அனைத்து இடங்களிலிருந்தும் அருமை புரியாமல் மேலைத்தேய குளிகைகளிலேயே காலங்கழித்துக் கொண்டிருக்கிறோம். ஆக மொத்தத்தில் ஐந்தறிவு நாய்க்குத் தெரிந்த, புரிந்த இந்த விஞ்ஞான வித்தை ஆறறிவு மனிதர் எமக்கு இன்னுமே புரியவில்லையே.

*அறுகம்புல் -வெறும்புல் அல்ல*

சிவபுராணத்தில் புல்லாகி பூண்டாகி என தொடர்ந்தும் அனைத்தும் அடங்கிய இத் தாவர சங்கமத்துள் என ஒருங்கிணைக்கும் போது புல்லின் அருமை புரிகிறதல்லவா. களை என்பதும் புல் என்பதும் இருவேறு அர்த்தங்களையுடையதாவதும் இவையனைத்தையும் தெளிவுபடுத்துகின்றன.

விளைநிலத்தில் எமது தேவைகருதி நடவு செய்யும் தாவரத்தையோ இன்னும் தாவரங்களையோ முதன்மைப் பயிர்களாக கருதும்போது அவற்றிற்குப் போட்டியாக தானாக முளைத்தெழுந்திட தேவையான உள்ளீடுகளனைத்திற்கும் போட்டியாகவிருக்கும் முக்கியத்துவமற்ற தாவரங்களனைத்தையும் களைகள் என்ற பொதுவான வரையறைக்குள் அடக்கி விடுகின்றோம். இதன் காரணமாகவே இந்த பயிர்-களை போட்டியைத் தவிர்ப்பதற்காக அல்லது நிவர்த்தி செய்யும் முகமாக களையகற்றுதல் அல்லது அழித்தல் முக்கியத் துவம் பெறுகின்றது. இன்னும் பயிர்- களை என பிரித்துப் பார்ப்பதை விட பயிர்களை (பயிர்+களை) என சேர்த்துப் பார்ப்பதால் களை முகாமைத்துவம் கருத்துருவாகின்றது.

பயிரைப் போல களைக்கும் முக்கியத்துவம் கொடுத்தால் களைக்கு மதிப்பேற்றம் செய்து பணந்தரும் தாவரமாக்கினால் முகாமைத்துவப்படுத்துவது இலகுவாகிவிடும்.

(வளரும்)

## விசேட அதிரடிப்படையின் நடவடிக்கைகள் பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ்

விசேட அதிரடிப்படையின் நடவடிக்கைகள் பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு மற்றும் யுத்தத்தின் பின்னரான நடவடிக்கைகளை நேரடியாக கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 12ஆம் திகதி முதல் விசேட அதிரடிப்படையின் நடவடிக்கைகளை பாதுகாப்பு அமைச்சு கண்காணித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்த யோசனைத் திட்டத்திற்கு கடந்த புதன்கிழமை அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதாக அரசாங்க வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விசேட அதிரடிப்படையின் நடவடிக்கைகள் இதுவரை காலமும் பொலிஸ்மா அதிபரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவினால் 1983 ஆம் ஆண்டு பயங்கரவாத மற்றும் கிளர்ச்சி நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கில் விசேட பொலிஸ் அதிரடிப்படை உருவாக்கப்பட்டது. (6-4)

## நாடெங்கிலுமுள்ள 100 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு இடமாற்ற உத்தரவு

(கொழும்பு)

நூறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றி வரும் சுமார் நூறு பொறுப்பதிகாரிகள் இவ்வாறு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சிலர் சாதாரண கடமைகளுக்காக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 26 ஆம் திகதி பொலிஸ்மா அதிபர் விசேட உத்தரவொன்றை பிறப்பித்துள்ளார்.

(6-4)

## கடந்த 30 வருடங்களில் 45 ஆயிரம் பல்கலை.மாணவர்கள் காணாமல் போயுள்ளனர்

### உடுல் பிரேமரட்ண தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் கடந்த 30 வருடங்களில் 45 ஆயிரம் பல்கலைக்கழக மாணவர்கள் காணாமல் போயுள்ளதாகவும் இதில் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் நாலாயிரம் பேரும் கிழக்கில் 3 ஆயிரம் பேரும் காணாமல் போயுள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் உடுல் பிரேமரட்ன தெரிவித்துள்ளார்.

காணாமல் போனதாக கூறப்பட்ட பேராதனை பல்கலைக்கழக மாணவியான இராசையா துவாரகா, காலி பூஸா முகாமில் விடுதலைப்புலி உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் தமது அமைப்பு காணாமல் போன மாணவர்களை கண்டுபிடித்துக் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர், விடுதலைப்புலிகளின் உறுப்பினராக இருந்தாலும் குற்றம் இருந்தால் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட வேண்டும் அல்லது அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோரின் சுமார் 60 உறவினர்களை நேற்று முன்தினம் கொழும்பில் சந்தித்த ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன், யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் இரவு நேர ஊரடங்கு சட்டவேளையிலேயே கடத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோரின் உறவினர்களுடன் சந்திரசேகரன் கலந்துரையாடல் ஒன்றை நடத்திய நிலையில் அதன் பின்னர் இலங்கையின் குற்றப் புலனாய்வுத்துறையினர் அவரை விசாரணை செய்தமை குறிப்பிடத்தக்கது. (6-





வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ்.பொலிஸ் நிலையத்தால் யாழ். போதனா வைத்தியசாலை நோயாளர் விடுதியில் உள்ள 500 பேருக்கு சமைத்த உணவுகள் வழங்கப்பட்டன. இதில் யாழ். மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெமின் பத்மதேவ நோயாளர்களுக்கு அவற்றை கையளிப்பதைப் படங்களில் காணலாம்.

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள்

## 50 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனங்களை தீர்வை வரியின்றி பெறலாம்

### அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

புதிதாக தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தீர்வை வரியின்றி வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

இதன்படி தீர்வை அற்ற முறையில் 35 ஆயிரம் டொலர்களாக காணப்பட்ட இந்த அனுமதிப் பத்திரத்தின் பெறுமதி 50 ஆயிரம் டொலர்கள் வரையும் அதி கரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி புதிய நாடாளுமன்ற உறுப்பிணர்கள் 50ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான வாகனங்களை தீர்வை வரியின்றி பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் வாகனப் பெறுமதியில் 19 சதவீதத்தை அவர்கள் தீர்வையாக செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (6-9)

## வவுனியா வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முழுமையான மீள்குடியேற்றம்

### வவு.அரசாங்க அதிபர் தெரிவிப்பு

வவுனியா வடக்கு உதவி அரசாங்கப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முழுமையாக இடம் பெற்றுள்ளதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ். சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வுதவி அரச அதிபர் பிரிவில் 20 கிராம சேவகர் பிரிவுகளைஉள்ளடக்கிய இப்பகுதி முழுமையாக மிதிவெடிகள் அகற்றப்பட்டு அப்பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதெனவும் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-9)

## இந்தோ. கடற்பரப்பில் காப்பாற்றப்பட்ட 26 இலங்கையர்கள் தொடர்ந்தும் ஜாவாவில்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியா செல்லும் வழியில் இந்தோனேசிய கடற்பரப்பில் தத்தளித்த நிலையில் காப்பாற்றப்பட்ட 26 அகதிகளும் மத்திய ஜாவாவில் தொடர்ந்தும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவுக்கு அழைத்துச் செல்வதற்கு இன்னும் இரண்டு, மூன்று நாட்கள் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜகார்த்தாவில் உள்ள முகாம்களில் இடமில்லாத காரணத்தினால் குறித்த 26 பேரையும் அங்கு அழைத்துச் செல்ல முடியாதுள்ளதாக ஜாவாவில் உள்ள சிலாகெவப் முகாமின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடலில் இருந்து மீனவர்களால் காப்பாற்றப்பட்ட 26 பேரும் களைப்படைந்து இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சிலர் சுகவீனமுற்ற நிலையில் சிகிச்சைகள் தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் காப்பாற்றப்பட்ட இலங்கையர்கள் 26 பேரும் தற்போது சஞ்சயா ஹோட்டலில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.


எனினும் அது அகதிகளை தொடர்ந்து வைத்திருக்கக்கூடிய இடமில்லை என்பதால் அவர்களை ஜகார்த்தாவிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொறுப்பதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

காப்பாற்றப்பட்ட அனைவரும் அவுஸ்திரேலிய கிறிஸ்மஸ் தீவுக்கு செல்வதற்கான உரிய ஆவணங்களைக் கொண்டிருக்கவும் அவர் தெரிவித்துள்ளார்.

மீனவர்களால் காப்பாற்றப்பட்ட குறித்த 26 பேரும் அவுஸ்திரேலியாவில் அடைக்கலத்தைப் பெற்று தொழில்வாய்ப்பை எதிர்பார்ப்பதாகவும் அவர்கள் அரசியல் ரீதியில் அடைக்கலம் கோரும் நோக்கம் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மீனவர்களால் காப்பாற்பட்பட்ட குறித்த 26 இலங்கையர்களும் முதலில் தமது படகில் இருந்து ஹோட்டலுக்கு வரமறுத்ததாக தெரிவித்துள்ள இந்தோனேசிய அதிகாரி ஒருவர், யு.என்.எச்.சி.ஆர் மற்றும் சர்வதேச புலம்பெயர்ந்தோருக்கான அமைப்பான ஐ.ஓ.எம். ஆகியவற்றின் அதிகாரிகள் வந்தவுடனேயே படகில் இருந்து வெளியேறி இந்தோனேசிய அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்த ஹோட்டலுக்கு செல்ல இணங்கினர் என்றும் தெரிவித்துள்ளார். (6-4)

## ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொள்ளாது வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் வெளிநடப்பு?



(கொழும்பு)

அமெரிக்க தேசிய ஊடகக் கழகத்தில் நடைபெறவிருந்த ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொள்ளாது, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இறுதி நேரத்தில் வெளிநடப்பு செய்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.



குறித்த ஊடகவியலாளர் சந்திப்பிற்கு பிரசன்னமான போதிலும், எவ்வித கருத்துக்களையும் வெளியிடாது, அமைச்சர் வெளியேறிச் சென்றதாக தேசிய ஊடகக் கழகத்தின் உயரதிகாரி டெஜின்டர் சிங் தெரிவித்துள்ளார்.

என்ன காரணத்தினால் ஊடகவியலாளர் சந்திப்பை அமைச்சர் புறக்கணித்தார் என்பது இதுவரையில் தெரியவில்லை.

அமெரிக்க இலங்கை உறவுகள், யுத்தத்தின் பின்னரான இலங்கை ஆகிய விடயங்கள் தொடர்பில் அமைச்சர் பீரிஸ் உரையாற்ற இருந்ததாக தேசிய ஊடகக் கழக இணையத்தளத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொள்ளாது அமைச்சர் வெளியேறியமை உண்மை என வெளிவிவகார அமைச்சு உறதிப்படுத்தியுள்ளது.


எனினும், என்ன காரணத்திற்காக அமைச்சர் இவ்வாறு ஊடகவியலாளர் சந்திப்பிலிருந்து வெளிநடப்புச் செய்தார் என்பது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை. (6)

ஜி.ரி. இசற் நிறுவனத்தின் அனுசரணையில் வடமாகாண கல்வி அமைச்சின் ஆதரவுடன் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற அரச அதிகாரிகளுக்கான ஆங்கிலப் பயிற்சி நெறியின் நிறைவு நாள் நிகழ்வில் பிரிட்டிஸ் கவுன்சிலின் ஆங்கிலமொழி விரிவுரையாளர் திரு.திருமதி தோமஸ் கனோன் தம்பதிகள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும், யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் உரையாற்றுவதையும், யாழ். மாவட்டச் செயலகத்தில் அரச சார்பற்ற நிறுவன இணைப்பதிகாரியாகக் கடமைபுரியும் எஸ்.தயாபரன், விரிவுரையாளர் தோமஸிற்கு நினைவுப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# ஒரு மெய்யியலாளன் குறித்த ஞாபகக் குறிப்புகள்

## பேராசிரியர் சோ.கிருஸ்ணராஜாவின் ஓராண்டு நிறைவு இன்று



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேல் மெய்யியல் துறையின் விரிவுரையாளராக, பேராசிரியராக, துறைத் தலைவராக இருந்து அதன் வளர்ச்சிக்கு வளம் சேர்த்ததோடு சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதப் பண்பியல் துறைகளின் வளர்ச்சியிலும் கணிசமான பங்களிப்பினை ஆற்றியவர் பேராசிரியர் சோ.கிருஸ்ணராஜா. விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும்,அர்ப்பணிப்பும் மிக்க ஒரு புலமையாளனை நாம் இழந்து இன்று ஒரு வருடமாகிவிட்டது.

மெய்யியல் ஆசிரியனாகவும், தத்துவ ஞானியாகவும், கலை இலக்கிய விமர் சகனாகவும், மானிடவியல் , சமூகவியல் மற்றும் உளவியல் துறைகளில் ஈடுபாடு கொண்ட ஆய்வாளனாகவும் அத்துடன் ஒரு சமூக விஞ்ஞானியாகவும் வாழ்ந்து, வரலாற்றில் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட கிருஸ்ணாவின் தத்துவம் மற்றும் தனித்துவம் குறித்த ஞாகப் பகிர்வாக இக்கட்டுரை அமைகிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் K.N.ஜெயதிலக, பேராசிரியர் மதியாபரணம் வி.பொன்னம்பலம், காசிநாதன், இராமகிருஸ்ணன் முதலிய புலமையாளர்களின் வழிகாட்டலில் மெய்யியலை சிறப்புத்துறையாகக் கற்றுத்தேறியதன் மூலம் காத்திரமான ஒரு புலமைத்தளம் இடப்பட்டது. பின்னர் மாஸ்கோ அரச பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டதன் மூலம் புலமைசார் தத்துவாசிரியனுக்குரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டார்.

"பேராசிரியர் கிருஸ்ணராஜாவை,தத்துவத்தைக் கற்பித்த ஒருவராக மாத்திரம் வரையறுக்க முடியாது. அவர் ஒரு தத்துவ ஞானியாகவே விளங்கினார்" என்பர் பேராசிரியர் கா.சிவத்தம்பி.

கிருஸ்ணா பல்பரிமாணம் ஆளுமை மிக்க, தத்துவார்த்த சிந்த னையாளராக விளங்கினார். மாக்சிச சித்தாந்த அடிப்படை யினைப் புரிந்துகொண்ட ஒருவராக இருந்த அதே வேளை, அதற்கு எதிரான அணுகுமுறை யைக் கொண்ட காள்பொப்பரின் சமூக அறிவியலுக்கான முறையியல் பற்றிய தெளிவுடையவராகவும் இருந்தார்.

கிருஸ்ணா ஒருபோதும் தன்னை ஒரு மாக்சிசவாதியாகப் பிரகடனப்படுத்தியது கிடையாது. ஆனால் அவரது சிந்தனையும், பார்வையும் இயங்கியல் அடிப்படையிலேயே அமைந்திருந்தன. மாக்சிசத் தத்துவத் தெளிவுடையவராக இருந்த தோடு மாக்சிசம் தொடர்பாக முன் வைக்கப்பட்ட மாயைகளையும் திரைவிலக்கினார்.

*"மாக்சிச மெய்யில் என இன்று கூறப்படுவதை*
*மாக்சினது எழுத்துக்களில் காணமுடியாது.*
*மாக்சினது எழுத்துக்களில் காணப்படும் மெய்யியற்*
*சிந்தனைக்கும் பிற்காலத்தில் மாக்சிய மெய்யில் என அறியப்பட்டதற்கும் மிகப் பெரிய வேறுபாடு உண்டு" என ஆதாரங்களோடு விளக்கினார்.*

இச் சிந்தனை மாக்சிசத்தின் அடிப்படையை மாற்றி அதனை மாறாத ஒரு தத்துவமாக மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் மனோபாவத்துக்கெதிரானதாக இருந்ததுடன், பாக்கியவாதிகளை மறுவாசிப்புச் செய்வதற்கான கோரிக்கையாகவும் அமைந்தது.

இவ்வாறே 'பண்பாடு' மற்றும் 'பண்பாடு பற்றிய கற்கை' என்பவற்றுக்கிடையேயான அடிப்படை வேறுபாடுகளையும், அவை பற்றிய புரிதல்களையும் விளங்கிக் கொள்வதில் இத்துறை சார்ந்த சர்ச்சைகள் எழுந்தபோது, அவை குறித்த ' புலமைசார் ஒழுக்கங்களுக்கு அமைவாகப் பண்பாடு பற்றிய மேலைத்தேய அறிஞர்களின் கோட்பாடுகளைத் தமிழில்அறிமுகம் செய்தார். இதன்மூலம் இத்துறை பற்றிய புதிய வாசிப்புக்கான சாத்தியப்பாட்டை உருவாக்கினார்.

மேலைத்தேயக் கோட்பாடுகளில் ஈடுபாடுடையவராக இருந்தபோதும் அவற்றை விசாரணையற்ற விசுவாசத்தோடு ஏற்றுக் கொள்ளாது விமர்சனக் கண் கொண்டு நோக்கி, அவற்றின் சாத்தியப்பாடுகளை, பயன்பாடுகளைத் தமிழுக்கு அறிமுகம் செய்தார்.

இவற்றோடு நின்றுவிடாது கீழைத்தேய சிந்தனை முறைகளையும் சரிவரப் புரிந்து கொண்டு செயற்பட்டவர். குறிப்பாக, தமிழர் மெய்யியல், தமிழ் மெய்யியல், தமிழர் பண்பாட்டியல் மெய்யியலின் தோற்றம் எனத் தமிழ்ச். சிந்தனை மரபின் ஊற்றுக்களையும், ஓட்டங்களையும் மிகுந்த ஈடுபாட்டோடு தேடியவர். அவற்றை மெய்யியற் கற்கை நெறியின் அங்கமாக்கிக் கற்பித்தவர்.

தேடலும் சிந்தனையுமே கல்வித்துறை சார்ந்து தொழிற்பாடுவோர்களின் முதலீடு. ஆசிரியர் தன்னை வளர்த்துக் கொள்ளும் போது அவன் சார்ந்த துறையும் வளரும் என்பதை தீர்க்கமாக நம்பியவர். மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் தேடவும் சிந்திக்கவும் வைத்தவர். இடைவிடாது கற்பது, கற்றவற்றைப் பகிர்ந்து கொள்வது, மற்றவர்களைச் சிந்திக்கத் தூண்டுவது, அதனை வெளிப்படுத்த வாய்ப்பை ஏற்படுத்துவதுமான புலமைப் பண்பாடு அவரிடம் இயல்பாகக் குடிகொண்டிருந்தது.

இளம் விரிவுரையாளர்கள் புலமைசார் கருத்தரங்குகள், ஆய்வரங்குகளில் பங்கு கொண்டு அது சார்ந்த அனுபவங்களைப் பெறவேண்டும் என வற்புறுத்தியதோடு அதற்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்தவர்.

பேராதனைப் பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக்கழகம் , கிழக்குப் பல்கலைக் கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்களில் பணியாற்றிய அனுபவம் உள்ளவர். கிழக்கு மற்றும் தென் கிழக்குப் பல்கலைக்கழகம் போன்றவற்றில் பாடவிதானங்களை உருவாக்குவதிலும் கற்பிப்பதிலும் கணிசமான பங்களிப்பினை ஆற்றினார். தனது இறுதிக் காலம் வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றி அதன் வளர்ச்சிக்கு பங்காற்றி மறைந்தார்.

**க.அருந்தாகரன்**

இவையாவற்றையும் ஒன்றிணைத்துப் பார்க்கும் போது தமிழ்ச் சமூக பண்பாட்டு வரலாற்றிலும் மெய்யியல் வரலாற்றிலும் நீக்கிவிட்டுப் பார்க்க முடியாத ஒரு ஆளுமையாகவே இவர் மையம் கொள்கிறார். இந்த இடத்தில் பேராசிரியரின் புலமைப் பேற்றினை எமது சமூகம் முழுமையாக உள்வாங்கிக் கொண்டதா? என்ற கேள்வி எழுகிறது. கிருஸ்ணராஜா அவரது இறுதி மூச்சுள்ளவரை தனது சக்திக்குட்பட்ட சகல முயற்சிகளையும் புலமைசார் ஆற்றுப்படுத்தல்களையும் உறுதியாக மேற்கொண்டவர்.

# மீளக்குடியமரும் அனைத்து குடும்பங்களுக்கும் சைக்கிள்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

## ஐ.தே.க.எம்.பி. ஜயலத் தெரிவிப்பு

(கொழும்பு)

நலன்புரி முகாம்களிலிருந்து மீளக்குடியமரும் அனைத்துக் குடும்பங்களுக்கும் சைக்கிள்களை பெற்றுக்கொடுக்கும் வேலைத் திட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் இதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சமூகங்களிடமிருந்து உதவிகள் பெறப்படும் என்றும் ஐக்கிய தேசிய கட்சியின் மனித உரிமைகள் மற்றும் நிவாரணம் தொடர்பான உதவிச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்ற விடயம் குறித்து தகவல் வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

நலன்புரி முகாம்களில் எஞ்சியுள்ள அகதிமக்களை மூன்று மாதகாலத்துக்குள் மீள்குடியேற்றுமாறு ஜனாதிபதி பணித்துள்ளதாக தெரியவருகின்றது. யுத்தம் முடிவடைந்தவுடன் 180 நாட்களில் அகதி மக்கள் அனைவரும் மீள்குடியேற்றப்படுவார்கள் என்று அரசாங்கம் கூறியிருந்தது.

ஆனால் ஒருவருடம் கடந்துள்ள நிலையிலும் தொடர்ந்தும் மக்கள் முகாம்களில் எஞ்சியுள்ளனர். தற்போது மூன்றுமாத காலத்தில் மீள்குடியேற்றப்பட வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

ஆனால் முறையான திட்டம் ஒன்றின் கீழ் சகல வசதிகளுடனும் அந்த மக்களை மீள் குடியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை கோருகின்றோம். மேலும் மீள் குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்.

மீள்குடியேற்றப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு நான் அண்மையில் விஜயம் செய்தேன். அங்கு குடியேற்றப்பட்டுள்ள மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். எனவே அவற்றை நீக்கி அம்மக்களின் வாழ்வாதார பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும்.

மீள்குடியேற்றப்படும் மக்களுக்கு 10 தகரங்களும் 25 ஆயிரம் ரூபா பணமும் வழங்கப்படு கின்றன. அது அம்மக்களுக்கு எந்தவகையிலும் போதுமானதல்ல. தற் போது வழங்கப்படும் தகரங்களின் எண்ணிக்கை



20 ஆகவும் பண உதவி 50 ஆயிரம் ரூபாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அவர்களின் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்காக தொழில் செய்யும் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

நான் முன்னாள் மீள்குடியேற்ற அமைச்சர் என்ற வகையிலும் ஐக்கிய தேசிய கட்சியின் மனித உரிமைகள் மற்றும் நிவாரணம் தொடர்பான உதவிச் செயலாளர் என்ற ரீதியிலும் மீள்குடியமரும் அனைத்து குடும்பங்களுக்கும் சைக்கிள்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.விரைவில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

இந்த வேலைத்திட்டத்துக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சமூகங்களிடமிருந்து உதவிகள் எதிர்பார்க்கப்படுகின்றன என்றார். (6)

## கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

நேஷன் லங்கா பினான்ஸ் பி.எல்.சி சுன்னாகக் கிளையின் அனுசரணையுடன் மல்லாகம் வானவில் விளையாட்டுக் கழகம் நடத்திய 20-20 கிரிக்கெட் போட்டி மற்றும் 6 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டுமைதானத்தில் நடைபெறவுள்ளது.


இதில் 20-20 கிரிக்கெட் போட்டியில் மல்லாகம் M.R.F. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். காமாட்சி விளையாட்டுக் கழக அணியும் 6 ஓவர்கள் கொண்ட போட்டியில் தெல்லிப்பழை கலையொழி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன. (6-4)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி யூபிற்றல் கல்வி நிலையத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கயிற்ற சிட்டி திருமண மண்டபத்தில் கல்வி நிலைய அதிபர் சி.மதியழகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு தென்மராட்சி பிரதிக் கல்வி பணிப்பாளர் சி.முத்துலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார் என கல்வி நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (6)



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் மெய்வல்லுநர் போட்டியின் நிறைவு நாள் நிகழ்வுகளின் போது கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை, லயன் டாக்டர் வை.தியாகராஜா, விரிவுரையாளர் சரா.புவனேஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவதையும், வெற்றிபெற்ற அருணா இல்லத்திற்கான வெற்றிக் கேடயத்தை லயன்.டாக்டர் வை.தியாகராஜா, சட்டத்தரணி சி. இராமச்சந்திரன் ஆகியோர் இணைந்து கையளிப்பதையும், கலாசாலை ஆசிரிய மாணவிகளின் உடற்பயிற்சிக் கண்காட்சியையும் படங்களில் காணலாம்.

# கிளி.மாவட்டத்தைச் சேர்ந்த 1800 பேர் நாளை மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்

## முல்லை.அரச அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியா மெனிக்பாம் முகாமில் தங்கியுள்ள கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரத்து 800 பேர் நாளை அவர் களது சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இம் முகாமில் உள்ள 480 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 800 பேரே இவ்வாறு மீளக்குடியமர்த்தப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஆர். கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட புன்னை நீராவி, பிரமந்தனாறு ஆகிய பகுதிகளிலேயே இவர்கள் மீள் குடியமர்த்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 22 ஆயிரம் பேர் இன்னும் மீள் குடியமர்த்தப்படாமல் எஞ்சியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (6)

# ஈழத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வை வழங்குமாறு இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## இந்திய ஆர்வலர்கள் மத்திய அரசை வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை தமிழர்களுக்கு உடனடியாக அரசியல் தீர்வை வழங்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என இந்திய பொது உரிமை ஆர்வலர்கள் இந்திய மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி இந்தியா செல்லவுள்ளார்.

அங்கு அவர் சோனியா காந்தி மற்றும் பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட பலரை சந்திக்கவுள்ள நிலையிலேயே இந்த வலியுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாடுகளின் நாடாளுமன்றங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்கள் இணைந்த வகையில், இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் அனைத்து இலங்கை தமிழர்களுக்கும் ஒரே கட்டுப்பாட்டுடனான சமவுரிமை மற்றும் அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதே வேளை தமிழக அரசாங்கத்தின் அழுத்தம் இந்திய மத்திய அரசாங்கத்தை இலங்கை தமிழர் தொடர்பில் இயங்க செய்யுமாறு அமைய வேண்டும் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (6)

# நாகையில் இலங்கை அமைச்சருக்கு கறுப்புக்கொடி காட்ட முயன்ற 11 பேர் கைது

(நாகப்பட்டினம்)

நாகை மாவட்டம் வேளாங்கண்ணி அருகே இலங்கை அமைச்சருக்குக் கறுப்புக் கொடி காட்ட முயன்ற நாம் தமிழர் இயக்கத்தினர் 11 பேர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இலங்கை அரசின் கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் தயஷ்ரீதா திசேரா மற்றும் அவரது குடும்பத்தினர் வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் வழிபாடு மேற்கொள்ள நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் நாகை மாவட்டத்துக்கு காரில் வந்தனர்.

இதனிடையே இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஒரு சில அமைப்புகள் சார்பில் நாகை புத்தூர் அண்ணாசிலை, நாகை வேளாங்கண்ணி ரயில்வே கேட் -பரவை வேளாங்கண்ணி ஆகிய பகுதிகளில் கறுப்புக் கொடி காட்டத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியானது.

இதையடுத்து நாகை காவல் துணைக் கண்காணிப்பாளர் டி.கே.நடராஜன் தலைமையில் மேற்கண்ட பகுதிகளில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை சுமார் 5 மணிக்கு இலங்கை அமைச்சர் தயஷ்ரீதா திசேரா நாகை வந்தார். பின்னர் புத்தூர் அண்ணா சிலை பகுதியிலிருந்து கூடுதல் பாதுகாப்புடன் அவர் வேளாங்கண்ணிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

வேளாங்கண்ணி ஆர்ச் அருகே பிரதான சாலையில் இலங்கை அமைச்சரின் கார் வந்து கொண்டிருந்த போது நாம் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்த சிலர் திடீரென கறுப்புக் கொடியுடன் வந்து இலங்கை அமைச்சரின் காரை மறிக்க முயன்றனர்.

இதையடுத்து கறுப்புக்கொடி காட்ட முயன்ற நாம் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்த 11 பேரை பொலிஸார் கைதுசெய்தனர். (6-4)



பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்பமாணி பட்டமளிப்பு விழாவில் துணைவேந்தர், விரிவுரையாளர்கள் மற்றும் சக மாணவர்களுடன் யாழ் எம்.சி.எஸ். நிறுவன மாணவர்களும் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# வடமாகாண லயன்ஸ் கழகத்திலிருந்து முதன் முதலாக உப மாவட்ட ஆளுநர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் 306 B1 இன் வருடாந்த மாநாடு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் 2010/2011 ஆம் ஆண்டிற்கான உபமாவட்ட ஆளுநர் பதவிக்கான தேர்தலில் 59.7 வீத வாக்குகளைப் பெற்று மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட தலைவர் லயன் எஸ். எஸ்.தங்கராஜா வெற்றிபெற்றதுடன் வடமாகாண லயன்ஸ் கழகங்களின் 37 ஆண்டு வரலாற்றில் முதன் முதலாகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் யாழ்.மாவட்டத்திற்கு பெருமை தேடித்தந்துள்ளார்.

இவர் கடந்த 25 வருடங்களாக முழு அர்ப்பணிப்புடன் நலிவுற்ற மக்களுக்காக சேவையாற்றி எல்லோரினதும் நன்மதிப்பை பெற்றவராவார்.

தனது சேவைக்காலத்தில் 108 அங்கத்தவர்களை லயன்ஸ் கழகங்களில் இணைத்து அதியுயர் விருதான "Key of Nation" ஐப் பெற்றுள்ள பெருமை அவரைச் சாரும்.



அத்துடன் யாழ். மாவட்டத்தில் 5 லயன்ஸ் கழகங்களை உருவாக்கியுள்ளார்.

மேலும் யாழ். மாவட்டத்தில் பல லியோ கழகங்க ளை உருவாக்கிய துடன் அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ளார். கண்பார்வைக்கு முதலிடம் அளிக்கும் சேவைத் திட்டத்திற்கு பெரும் பங்காற்றியுள்ளார்.

இவரின் சேவைக்காக மாவட்ட ரீதியிலும் சர்வதேச மட்டத்திலும் பல விருது களை பெற்றுள்ளதுடன் லயன்ஸ் கழக சமூகத்தில் பெரும் மதிப்பையும் பெற்றுள்ளார். (6-4)

# ஆடைக் கைத்தொழில் ஏற்றுமதி துறையில் பாரிய வருமான வீழ்ச்சி

## புள்ளிவிபர தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆடைக்கைத்தொழில் துறையில் பாரியளவு வருமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக புள்ளி விபரத் தகவல்கள் சுட்டிக் காட்டுகின்றன.

2010 ஆம் ஆண்டுக்கான முதல் காலாண்டுப் பகுதியில் ஆடைக் கைத்தொழில் துறையில் 15 வீத வருமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆடைக்கைத்தொழில் ஏற்றுமதித்துறையில் பதிவான மிகவும் மோசமான வருமான வீழ்ச்சி இம்முறை பதிவாகியுள்ளது.

இந்த வருமான வீழ்ச்சி காரணமாக இலங்கையின் அந்நியசெலாவணிவருமானமும் குறைவடைந்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் இந்த நிலைமை மேலும் மோசமடையலாம் எனப் பொருளியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (6-4)



வடமாகாண உள்ளூர் உற்பத்திக் கண்காட்சியும் விற்பனையும் நேற்று யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதையும், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து நாடாவெட்டி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும், விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும், கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட உள்ளூர் உற்பத்திப் பொருட்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலக செய்தியாளர்)

## போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த விசேட திட்டம் - அரசு அறிவிப்பு

(கொழும்பு)

போரில் பாதிப்புக்களை எதிர் நோக்கிய பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம் படுத்துவதற்கு விசேட திட்டமொன்று நடை முறைப்படுத்தப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அர சாங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற போரின் போது மிகவும் மோசமாக பாதிக்கப் பட்டவர்கள் பெண்களும் சிறுவர்களுமே என சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள் ளார்.

கிழக்கு மாகாணத்தில் 49 ஆயிரத் திற்கும் மேற்பட்ட விதவைகள் இருப்பதாக வும் இதில் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் மூன்று பிள்ளைகளை பராமரித்து வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவர்கள் அனைவரினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டியது அரசாங் கத்தின் கடமையாகும் என அவர் தெரிவித் துள்ளார். (6-4)

## உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி தொடர்ந்தும் ஒத்துழைக்கும்

### அதன் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் திட்டங்களு க்கு ஆசிய அபிவிருத்தி வங்கி தொடர்ந்தும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என ஆசிய அபிவிருத்தி வங்கி தலைவர் ஹரு ஹிகோ குரோடா ஜனாதிபதியிடம் உறுதிய ளித்துள்ளார்.

இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ஹருஹிகோ குரோடா தலைமையிலான குழுவினர் நேற்று முன் தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து உரையாடிய போதே மேற்கண்ட உறுதிமொழியை வழங்கி யுள்ளார்.

வடக்கு- கிழக்கில் தற்போது அரசினால் முன்னெடுக்கப்பட்டு வரும் உட்கட்டமைப்பு மேம்படுத்தும் திட்டங்கள் தொடர்பில் மகிழ்ச்சியடைவதாகவும் குறிப்பாக இத்திட்டங் கள் நடைமுறைப்படுத்துவதன் ஊடாக இது வரை கிடைத்துள்ள சாதகத்தன்மை குறித்து தான் திருப்தியடைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (6-4)




ஒட்டகப்புலம்

புனித அமலோற்பவ மாதா ஆலயப் பெருவிழா

காலம்: 31.05.2010

காலை 9.00 மணியளவில் விழா திருப்பலி ஆரம்பமாகும்.

கடந்த ஆறு ஆண்டுகளுக்குப் பிற்பாடு மாதாவின் விழா நடைபெற இறையருள்பாலித்திருப்பதால் மாதாவின் அருளாசி பெற்றிட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விழாவிற்கு செல்வதற்கு போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

செல்லவிரும்புவோர் 31.05.2010 அன்று காலை 7.00 மணியளவில் சுண்டுக்குளி

புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய முன்றலில் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பக்தர்களின் நன்மை கருதி இராஜ வீதி , பருத்தித்துறை வீதி ஊடாக பேருந்துகள் பயணிக்கவிருப்பதால்

இவ்வழிகளில் இடையில் இருந்து பயணிக்கவிரும்புவோர் கீழ் காணும் தொலைபேசி

இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

0212223302

0773671545

பங்குத்தந்தையும்,

பங்குமக்களும்.

(1592)


## சம்பந்தர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி யாலயத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 8 மணிக்கு திரு ஞானசம்பந்தர் குருபூசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ச.சத்திய வரதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் விசேடபூசை, பஜனை, கலைநிகழ்வுகள் என்பன இடம் பெறவுள்ளது. (6-4)

## விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

விபத்தில் படுகாயமடைந்து நீண்ட நாட் களாக யாழ்.போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டவர் சிகிச்கை பலனின்றி நேற்று மரணமடைந்துள்ளார்.

கடந்த 16 ஆம் திகதி கோயில் வீதி செஞ் சிலுவைச்சங்கம் முன் பாக ஆட்டோ- வான் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் அனு மதிக்கப்பட்ட கோப்பாய் மத்தியைச் சேர்ந்த அருள் ஜெயக்குமார் (வயது- 38)- என்பவரே சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை மரணமடைந் துள்ளார். 0 (6-7)

கட்டுப்பாடான சரியான வழியில் நம்மை நடத்திக் கொண்டால் பண்பு வளரும். இல்லையேல் நேர்மாறான விளைவுகள் தான் உண்டாகும்.
- பிளேட்டோ

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# விடுதலைப்புலிகளின் கீழ் மக்கள் வாழ விரும்பவில்லை

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பெரும்பான்மையான தமிழ் மக்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சியின் கீழ் வாழ விரும்பவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தோல்வியின் மூலம் நாட்டின் சகல மக்களும் அடக்கு முறைகளிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகளின் பிடியிலிருந்து விடுதலை கிடைக்கப் பெற்றமை தொடர்பில் தமிழர்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர்.

இதேவேளை இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அமெரிக்க அதிகாரிகளுக்கு விளக்கமளித்துள்ளார்.

அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும். இராணுவ ரீதியான வெற்றி இறுதித் தீர்வாக அமையாது எனவும், இந்த வெற்றியை ஓர் ஆரம்பமாகப் பயன்படுத்தி நிரந்தரத் தீர்வு நோக்கி நகர முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சு-5)

# வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டி யூன் 10இல் ஆரம்பம்

மாகாண மட்ட பாடசாலை விளையாட்டுப் போட்டி 2010 யூன் மாதம் 10ஆம் திகதி தொடக்கம் யூலை மாதம் 4ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் நடைபெறவுள்ளதாக வட மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் போட்டிகள் வருமாறு,

**வலைபந்தாட்டம்**

15,17 மற்றும் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைபந்தாட்டப் போட்டி யூன் மாதம் 10,11ஆம் திகதிகளில் உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

**உடற்பயிற்சி**

ஆண்கள், பெண்களுக்கான உடற்பயிற்சி 12ஆம் திகதி சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

**கரப்பந்தாட்டம்**

15,17 மற்றும் 19 வயதுப் பிரிவினருக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் 13,14 மற்றும் 15 திகதிகளில் ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

**கூடைப் பந்தாட்டம், மேசைப் பந்து**

ஆண்கள், பெண்கள் அணிகளுக்கான கூடைப்பந்தாட்டம் மற்றும் மேசைப்பந்து என்பன யூன் மாதம் 15, 16ஆம் திகதிகளில் நடைபெறும். கூடைப்பந்தாட்டப் போட்டிகள் யாழ். இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலைகளிலும், மேசைப்பந்து யாழ். மத்திய கல்லூரியிலும் நடைபெறும்.

**கொக்கி**

ஆண்கள், பெண்கள் அணிகளுக்கான கொக்கி விளையாட்டு 16, 17ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

**மென்பந்து கிரிக்கெட்**

ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகளுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி 17,18 ஆம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி மற்றும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலை மைதானங்களில் நடத்தப்படவுள்ளது.

வவுனியாவில் நடைபெறும் போட்டிகள் வருமாறு,

**எல்லே**

ஆண்கள், பெண்கள் அணிகளுக்கான எல்லே போட்டிகள் 21,22ஆம் திகதிகளில் வவுனியா நகரசபை மைதானம் மற்றும் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மைதானத்திலும் நடைபெறும்.

**கபடி**

ஆண்கள், பெண்கள் அணிகளுக்கான கபடிப் போட்டிகள் 23,24ஆம் திகதிகளில் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறும்.

**உதைபந்தாட்டம்**

17,19 வயது ஆண்கள் மற்றும் 19 வயது பெண்கள் அணிகளுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் 24,25மற்றும் 26 ஆம் திகதிகளில் வவுனியா நகரசபை மைதானம் மற்றும் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

**சதுரங்கம்**

15வயது முதல் 19 வயது பிரிவு வரையான ஆண்கள், பெண்கள் அணிகளுக்கான சதுரங்கப் போட்டிகள் 26,27 மற்றும் 28ஆம் திகதிகளில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலத்தில் நடைபெறும்.

**பூப்பந்தாட்டம்**

ஆண்கள், பெண்கள் அணிகளுக்கான பூப்பந்தாட்டப் போட்டிகள் 26,27 மற்றும் 28ஆம் திகதிகளில் வவுனியா நகரசபை உள்ளக விளையாட்டரங்களில் நடைபெறும்.

**கரம்**

15 முதல் 19 வயது வரையான ஆண்கள், பெண்களுக்கான கரம் 26, 27 மற்றும் 28ஆம் திகதிகளில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

**தடகளப் போட்டிகள்**

ஆண்கள், பெண்கள் பிரிவுகளுக்கான தடகளப் போட்டிகள் அனைத்தும் யூலை மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதி வரை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும். (சு)

# நாம் தமிழர் மாநாட்டில் இந்திய இறையாண்மைக்கெதிராக பேசியுள்ளார் பினாங்கு துணை முதல்வர்

## இந்திய அரசு குற்றச்சாட்டு

(சென்னை)

நாம் தமிழர் அரசியல் மாநாடு மதுரையில் மே -18 ஆம் திகதி நடைபெற்றது. மலேசியாவின் பினாங்கு மாநில துணை முதல்வர் இம்மாநாட்டில் கலந்துகொண்டு பேசினார்.

பொதுவாகவே இந்த மாநாட்டில் பேசியவர்களின் பேச்சுக்கள் பற்றி குறிப்பெடுத்தது இந்திய உளவுத்துறை. விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளதால் அந்த இயக்கத்தை ஆதரித்து பேசுகிறார்களா என்று குறிப்பெடுத்தது.

இந்த குறிப்புகள் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பினாங்கு துணைமுதல்வர் ராமசாமி, மதுரை மாநாட்டில் பேசும்போது விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆதரித்து பேசினார்.

மலேசியாவில் எங்கள் ஆட்சி அமைந்தால் விடுதலைப் புலிகளுக்கு அங்கீகாரம் அளிப்போம் என்று பேசினார் என அந்த குறிப்புகளில் அடங்கியிருக்கின்றன.

இந்திய வெளியுறவுத்துறை இந்த குறிப்புகளை மலேசிய அரசுக்கு அனுப்பு வைத்திருக்கிறது.அத்துடன் ஒரு கோரிக்கை கடிதமும் வைத்திருக்கிறது.

அந்த கடிதத்தில் இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசியுள்ளார் பினாங்கு துணைமுதல்வர் ராமசாமி. அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (6-4)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள் வீர இளைஞருக்கு



வஞ்சனையால் பெரும்பணி எதையும் செய்ய இயலாது. அன்பாலும் உண்மையை நாடுவதாலும் பேராற்றலாலும் தான் பெரும் செயல்கள் நிறைவேற்றப்படுகின்றன.எனவே உனது ஆண்மையை வெளிப்படுத்து.

எனது துணிவுடைய இளைஞர்களே! நீங்கள் பெரும் பணிகளைச் செய்யப்பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். குட்டி நாய்களின் குரைப்பைக் கண்டு நடுங்காதீர்கள். வானத்தில் முழுங்கும் இடியோசைக்கும் அஞ்ச வேண்டாம். நிமிர்ந்து நின்று வேலை செய்யுங்கள்.

# வெசாக் அனுஷ்டிப்பின் உட்பொருள் உணர்வீர்

வெசாக் பண்டிகை நாடு பூராகவும் கொண்டாடப்படுகின்றது. தென்பகுதியை விட வடபுலத்தில் வெசாக் பண்டிகைக் கொண்டாட்டம் களைகட்டியிருப்பது கண்டு எதுவுமே புரியாமல் திகைத்து நிற்கும் பரிதாபம் மட்டுமே தமிழ் மக்களிடம் மிஞ்சியுள்ளது.

அதேநேரம் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி என்ற பழம்பெருமை பேசுவதை விடுத்து சிங்கள மக்களிடம் இருக்கக் கூடிய நல்ல இயல்புகளை நாமும் பின் பற்றப் பழக வேண்டும்.

இவ்வாறு கூறுவது சிலரின் விருத்தியடையாச் சிந்தனைக்குச் சீற்றமாக இருக்கலாம்.

அவ்வாறானதொரு சிந்தனை இருக்குமாயின் அது மிகப் பெரும் தவறு. நாம் எதிர்நிலைச் சிந்தனையை வளர்த்து விட்டதால் எங்கள் எதிர்காலம் சூனியமாகிப் போகும் பரிதாப நிலையில் உள்ளது.

எனவே நாங்கள் நேர்கணியச் சிந்தனைக்குள் எங்களை உட்படுத்த வேண்டும்.

அவ்வகையில் சிங்கள மக்களிடம் குறிப்பாக அந்த இளம் சமூகத்திடம் இருக்கக் கூடிய பெரியவர்களை மதிக்கும் இயல்பையும் அவர்களிடம் இருக்க கூடிய இறை நம்பிக்கையையும் நாம் உற்றுநோக்குவது அவசியம்.

சிங்கள இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் தங்கள் பெற்றோரை-ஆசிரியர்களை-மதகுருமாரை-காலில் விழுந்து வணங்குவதைப் பார்க்கும் போது நாம் தலைகுனிந்து கண்ணீர் விடவேண்டியவர்களாக உள்ளோம்.

உயர் பண்பாட்டின் சொந்தக்காரர்கள் என்று எங்களை நாமே உயர்த்திக் கொண்டோமே தவிர எங்கேனும் எங்கள் இளம் சமூகம் பின்பற்றும் உயர் பண்பாட்டுக் கோலங்களை அடையாளப்படுத்த முடியுமா? என்றால் எதுவுமே இல்லை.

இந்நிலையில் எங்கள் இனம், அதன் உரிமை பற்றிய நினைப்புகளெல்லாம் கவலை தருவனவாகவே அமையும்.

வெசாக் பண்டிகை நடைபெறுகின்றது. ஒவ்வொரு படை முகாம்களிலும், காவலரண்களிலும் அந்த நாளை எவ்வாறு அனுஷ்டிக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும்.

ஆயுதம் ஏந்தியவர்கள்-போர் நடத்தியவர்கள் கௌதம புத்தபிரானை தொழும் காட்சி அவர்களின் இறைபக்தியையும், தெய்வநம்பிக்கையையும் மதப்பற்றையும் வெளிப்படுத்தி நிற்கின்றதல்லவா?

நாம் என்றால் அப்படிச் செய்வோமா? சிவராத்திரித் தினத்தில்தான் எங்கள் ஊர்ச் சாராயக் கடைகள் திறந்திருக்கும். அன்றுதான் விஜய், கமல், விக்கிரம் ஆகியோரின் காதல் புரிதல்கள் தொலைக்காட்சி வாயிலாக எங்கள் உள்ளங்களுக்கு கிளுகிளுப்பேற்றும்.

பியர் போத்தல்களுடன் இளவல்கள். கூடவே, அக்கினி குண்டத்தில் இருந்து எழுவது போல சிகரட் புகை.

சிவசிவா உனக்கென்ற இரவில் இப்படியென்றால் நீ எப்படி எங்களுக்கு உதவுவாய்!

எங்கள் நடத்தை பிடிக்காமையால் நீ விட்டுவிலகி எட்டச் செல்ல புத்தருக்கு அவர்களின் பிரார்த்தனை பிடித்துக் கொண்டது.

அதனால் அவர் வன்னியிலும் குடியேறுகிறார்.

வன்னியில் இருந்த மக்கள் மீள்குடியேற முதல் அவருக்கு ஏன் இந்த அவசரம் என்று கேளாதீர்கள்.

முதலில் நாங்கள் திருந்துவோம். இறைவனை மகிழ்விப்போம். அவன் சங்கரன். ஒரு கணப்பொழுதில் சங்காரம் செய்வான்.

பின்பென்ன எங்கள் தாய் மண்ணில் எங்களுக்கு என்ன குறை?

திருந்துவோமா? திருத்துவோமா? நடக்குமா? நடந்தால் நாம் சொன்னது நடக்கும். இது சிவன் மீது ஆணை.

# மாவோயிஸ்ட் தீவிரவாதிகளால் மும்பை ரயில் குண்டு வைத்து தகர்ப்பு

## 100 பயணிகள் பலி; பலர் காயம்





மேற்கு வங்கத்திலிருந்து மும்பை நோக்கி வந்து கொண்டிருந்த பயணிகள் ரயில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளால் நேற்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டது.

இச்சம்பவத் தில் 100 பயணிகள் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் பலர் காயமடைந்துள்ளனர். இந்தியாவில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கடந்த 5 ஆண்டுகளில் பல்வேறு தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

உள்நாட்டுப்பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ள அவர்கள் மீது மத்திய அரசு கடும் நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியுள்ளது.

இராணுவத்தையும் மறைமுகமாக தாக்குதலுக்கு பயன்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதனால் ஆத்திரம் அடைந்துள்ள மாவோயிஸ்டுகள் கடந்த சில மாதங்களாக தாக்குதல்களை அதிகரித்துள்ளனர்.

கடந்த மாதம் சத்தீஸ்கரில் அவர்கள் நடத்திய கொடூர தாக்குதலில் 78 மத்திய பொலிஸார் உயிரிழந்தனர். இதன் தொடர்ச்சியாக மாவோயிஸ்டுகள் மீண்டும் ஒரு பெரிய தாக்குதலுக்கு தயராகி வருவதாக உளவுத் துறை எச்சரித்திருந்தது.

இந்த நிலையில் மாவோயிஸ்டுகள் தற்போது கறுப்பு வாரம் கடைபிடித்து வருகின்றனர். அந்த சமயத்தில் அவர்கள் தாக்குதல் நடத்தக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டது. அதை உறுதிப்படுத்துவது போல நேற்று அதிகாலை மாவோயிஸ்டுகள் மிகப் பெரிய தாக்குதலை நிகழ்த்தியுள்ளனர்.

மேற்கு வங்க மாநிலம் அவுராவில் இருந்து மும்பை குர்லாவுக்கு நேற்று முன்தினம் இரவு ஞானேஸ்வரி சுப்பர் டிலக்ஸ் எக்ஸ்பிரஸ் ரயில் புறப்பட்டு சென்றது. நள்ளிரவு 1.35 மணிக்கு அந்த ரயில் மேற்கு வங்க மாநிலம் மேற்கு மிட்னாபூர் மாவட்டம் சரக்பூர் அருகே சர்திகா ரயில் நிலையத்தை கடந்து சென்று கொண்டிருந்தது. அப்போது மாவோயிஸ்டுகள் ரயில் தண்டவாளத்தில் குண்டுகளை வெடிக்க வைத்தனர்.



இதனால் ஞானேஸ்வரி சுப்பர் டீலக்ஸ் ரயில் பெட்டிகள் அடுத்தடுத்து கவிழ்ந்தன. மொத்தம் 13 பெட்டிகள் தடம் புரண்டு விழுந்தன. அந்த பெட்டிகள் அனைத்தும் அருகில் உள்ள தண்டவாளத்தின் மீது சரிந்து கிடந்தன.

கவிழ்ந்த 13 ரயில் பெட்டிகள் 12 பெட்டிகள் முன்பதிவு தூங்கும் வசதி கொண்ட பெட்டிகளாகும்.

ஒரு பெட்டி முன்பதிவு இல்லாத பொதுப் பெட்டியாகும். அதில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர். நள்ளிரவில் அயர்ந்து தூங்கிகொண்டிருந்த 13பெட்டிகளும் திடீரென கவிழ்ந்ததால் பயணிகள் இடி பாடுகளில் சிக்கி அலறினார்கள்.

அந்த சமயத் தில் 13 பெட்டிகள் சரிந்து கிடந்த தண்டவாளத் தின் எதிர் திசையில் இருந்து மின்னல் வேகத்தில் ஒரு சரக்கு ரயில் வந்து கொண் டிருந்தது. குண்டு வெடிப்பில் சிக்கி எக்ஸ் பிரஸ் ரயில் பெட்டிகள் கவிழ்ந்து கிடப்பதை சரக்கு ரயிலின் டிரைவரால் அருகில் வந்த பிறகே உணர முடிந்தது.

அவர் சுதாரிப்பதற்குள் சரக்கு ரயில் கவிழ்ந்து கிடந்த ஞானே ஸ்வரி எக்ஸ்பிரஸ் பெட் டிகள் மீது பயங்கர சத் தத்துடன் மோதி யது. இதில் கவிழ்ந்து கிடந்த பெட்டிகள் நொறுங்கின. சரக்கு ரெயிலும் கவிழ்ந்தது.

கண் இமைக்கும் நேரத்துக்குள் சினிமா காட்சி களை மிஞ்சும் வகையில் இந்த கோர சம்பவம் நடந் தது. ரயில் பெட்டிகள் மீது சரக்கு ரயில் மோதிய போது அந்த பகுதியே குலுங்கியது.

நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகள் படு காயம் அடைந்து கதறினார்கள். நள்ளிரவில் விபத்து நடந்ததால் இருட்டில் பயணிகள் கடும் தவிப்புக்குள்ளானார்கள். பயணிகளிடையே என்ன நடந்தது என்பதே புரியாமல் கடும் குழப்பம் ஏற்பட்டது.

பயணிகளை மீட்கும் பணிக்காக தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு அவசரகால படைவீரர்கள் மற்றும் விமானப்படையும் அனுப்பி வைக்கப்பட்டது. சிக்கிய பயணிகளை மீட்கும் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து மத்திய அமைச்சர் பிரணாப்முகர்ஜி ரயில்வே துறை அமைச்சர் மம்தாவை அழைத்து விசாரித்தார். இந்த நிலைமை குறித்து பிரதமரிடம் விளக்கப் பட்டது.

சம்பவத்தை அடுத்து இப்பகுதியில் ஹவுரா வழியாக செல்லும் ரயில்கள் ரத்து செய்யப்பட்டன. 150 பேர் வரை காயமுற்றிருப்பதாகவும் உயிர்ப்பலி அதிகம் இருக்கும் என அஞ்சப்படுவதாகவும் உள்துறை செயலர் ஜி.கே. பிள்ளை கூறினார்.

(6-4)

## ரயில் விபத்துக்கு நாசவேலையே காரணம் ; ப.சிதம்பரம் அறிக்கை



ரயில் விபத்து தொடர்பாக மத்திய மந்திரி ப.சிதம்பரம் வெளியிட்டுள்ளஅறிக்கையில் கூறியிருப்பதாவது,

ரயில் கவிழ்ந்ததற்கு நாசவேலையே காரணம் என்பதற்கான ஆதாரங்கள் தெரிகின்றன. தண்டவாளத்தின் ஒரு பகுதி அகற்றப்பட்டு இருந்தது. சம்பவ இடத்துக்கு 132 பேர் கொண்ட தேசிய பேரழிவு மீட்புப் படை உடனடியாக அனுப்பபட்டுள்ளது. அவர்கள் மாநில அரசுக்கும், ரயில்வேக்கும் உதவியாக மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இறந்தவர்களின் குடும்பத்துக்கு எனது இதயபூர்வமான அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன். காயம் அடைந்தவர்களுக்கு ஆறுதலை தெரிவிக்கின்றேன்.

மீட்புப் பணிகளை விரைவாக செய்யவும், காயம்அடைந்தவர்களை விரைவில் வைத்திய சாலையில் சேர்க்கவும் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு உள்ளன. ஹெலி கொப்டரும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

(6-4)

## கிளியோபாட்ராவின் அரண்மனை இடிபாடுகள் கடலில் கண்டுபிடிப்பு

(கெய்ரோ)

1600 ஆண்டுகளுக்கு முன்பு எகிப்து நாட்டின் அலெக்சாண்டரியா நகரில் இருந்து ஆட்சி செய்தவர் கிளியோபாட்ரா. உலக அழகியாக இவரை கிரோக்க வரலாறு புகழ்கிறது. கிளியோபாட்ரா வாழ்ந்த காலத்தில் இருந்த அரண்மனைகள் கோவில் வளாகம் ஆகியவை இப்போது கடலில் மூழ்கி விட்டன.

அந்தக் கடல் பகுதியில் ஆராய்ச்சியாளர்கள் கடலில் குதித்து நீந்தி அந்த இடங்களை கண்டுபிடித்தனர். பூகம்பங்களாலும் சுனாமிகளாலும் பாதிக்கப்பட்டு சுண்ணாம்பு பாலங்களாக அவை கடலுக்கு அடியில் கிடக் கின் றன. கடலுக்கு அடியில் இருந்து புதைந்து கிடக்கும் அந்தப் பகுதிகளை ஆராய்ச்சியா ளர்கள் ஆய்வு செய்து வருகி றார்கள். அந்தப் பகுதியில் இருந்து தொல் பொருட்களை கண்டு எடுத்து வருகிறார்கள். (6-4)

## ரஷ்யாவின் அரங்கமொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 6 பேர் பலி

(புதுடில்லி)

ரஷ்யாவின் அரங்கமொன்றில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் 6 பேர் கொல்லப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென் ரஷ்யாவின் ஸ்டவர் போல் நகரின் நாடக அரங்கமொன்றிற்கு வெளியே இந்தக் குண்டு வெடிப்பு நிகழந்துள்ளதாகவும் இதில் ஆறுபேர் உயிரிழந்துள்ளதுடன் 40 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து பெண்களும் ஒரு சிறுமியும் இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

நடனக் குழுவொன்று கலை நிகழ்வு ஒன்றை நடாத்துவதற்கு தயாராகிய வேளையிலேயே இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ரஷ்யர்கள் ஆர்மானியர்கள் மற்றும் செச்னியர்கள் இந்த சம்பவத்தில் காயமடைந்துள்ளனர்.

உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் பெயர் விபரங்கள் பட்டியல் படுத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

## அதிகாரிகளுக்கு விசா வழங்கமறுப்பதா? கனடாவுக்கு இந்தியா எச்சரிக்கை

(புதுடில்லி)

இந்திய அதிகாரிகளுக்கு விசா வழங்க மறுப்பது குறித்த விடயத்தில் கனடா அரசு ஒருவாரத்துக்குள் தனது தவறை திருத்திக் கொள்ள வேண்டும் என இந்திய உள்துறை அமைச்சகம் எச்சரித்துள்ளது.

இந்திய இராணுவ அதிகாரிகள் உளவுப் பிரிவில் பணியாற்றும் அதிகாரிகள் சார்பில் கனடா செல்வதற்கு விசா கோரி விண்ணப்பித்தால் கனடா தூதரகம் அதை நிராகரிப்பது வழக்கமாக உள்ளது.

இந்திய அதிகாரிகள் தங்கள் பணிகளின் போது மனித உரிமைகளை மீறி நடப்பதாக காரணம் கூறி அவர்களுக்கு விசா வழங்க கனடா தூதரகம் மறுத்து விடுகிறது.

கனடாவின் இந்த போக்கு மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.


இதுகுறித்து உள்துறை செயலர் ஜி.கே. பிள்ளை செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது, கனடா தூதரகத்தின் இந்த போக்கு குறித்து வெளியுறவு அமைச்சகத்துக்கு ஏற்கனவே கடிதம் எழுதியுள்ளோம். இதையடுத்து வெளியுறவு அமைச்சக அதிகாரிகள் கனடா தூதரக அதிகாரியை நேரில் அழைத்து தங்கள் அதிருப்தியை தெரிவித்தனர்.

விசா வழங்க மறுக்கும் விவகாரத்தில் கனடா அரசு தனது தவறை திருத்திக் கொள்ள வேண்டும். கனடா எடுக்கும் நடவடிக்கையை பொறுத்து இதுபோன்ற பதில் நடவடிக்கையை இந்தியாவும் எடுக்கும் இவ்வாறு ஜி.கே. பிள்ளை கூறினார்.

இதற்கிடையே உள்துறை அமைச்சக வட்டாரங்கள் கூறுகையில், இன்னும் ஒரு வாரத்துக்குள் கனடா அரசு தனது தவறை திருத்திக் கொள்ளாவிட்டால் இந்தியாவும் தகுந்த பதிலடி கொடுக்கும் என்றனர். (6-4)

# ரெய்லர், எர்வின் சாதித்தனர்; சிம்பாவே அணி இலகு வெற்றி

## ரோகித் சதமடித்தும் இந்திய அணி பரிதாபம்


ரோகித் சர்மா

(புலவாயோ)

ரெய்லர், எர்வினின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் சிம்பாவே அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தியது.

சிம்பாவே, இலங்கை மற்றும் இந்திய அணிகள் மோதும் முக்கோண ஒருநாள் கிரிக்கெட் தொடர் சிம்பாவேயில் நடைபெறுகின்றது.

இதில் புலவாயோவில் நேற்று நடைபெற்ற லீக் சுற்றின் முதலாவது போட்டியில் சிம்பாவே-இந்திய அணிகள் மோதின.

இத் தொடரில் அணித்தலைவர் தோனி, சேவாக், டெண்டுல்கர், காம்பீர், ஹர்பஜன் சிங், சகீர்கான், நெகரா உள்ளிட்ட மூத்த வீரர்களுக்கு ஓய்வு வழங்கப்பட்டு ரெய்னா தலைமையிலான இளம் இந்திய அணி விளையாடுகின்றது.


இதன் பிரகாரம் நேற்றைய போட்டியில் இந்திய அணி சார்பாக டின்டா, வினேய்குமார், யாதவ் ஆகிய மூன்று வீரர்கள் சர்வதேச ஒருநாள் போட்டியில் அறிமுகமானார்கள். சிம்பவே அணி சார்பாக எர்வின் அறிமுகமானார்.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ரோகித் சர்மாவின் சிறப்பான சதத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை யிழந்து 285 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரோகித் சர்மா 119 பந்துகளில் (6 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக) 114 ஓட்டங்களையும் ரவீந்திர ஜடேஜா ஆட்டமிழக்காமல் 61 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 61 ஓட்டங்களையும் அணித்தலைவர் சுரேஷ் ரெய்னா 53 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 37 ஓட்டங்களையும் டினேஷ் கார்த்திக் 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மனேபு 2 விக்கெட்டுக்களையும் உற்சயா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். பதிலுக்கு 50 ஓவர்களில் 286 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி ரெய்லர், எர்வினின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 48.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களைமாத்திரமிழந்து 289 ஓட்டங்களைக் குவித்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் ரெய்லர் 103 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 81 ஓட்டங்களையும் அறிமுக வீரர் எர்வின் ஆட்டமிழக்காமல் 60 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 67 ஓட்டங்களையும் மசகட்ஷா 43 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 46 ஓட்டங்களையும் கொன்வென்றி 32, லாம்ப் 27 ஓட்டங்களையும் எடுத்தனர்.


ரெய்லர்

பந்துவீச்சில் அறிமுக வீரர் வினேய் குமார் 2 விக்கெட்டுக்களையும் மிர்ஷா, ஜடேஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர். இவ்வெற்றியின் மூலம் சிம்பாவே அணி 4 புள்ளிகளைப்பெற்றது.

## கூடைப்பந்தாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி சம்பியன்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி விளையாட்டு அவை யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்திவந்த கூடைப் பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று பிற்பகல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடந்தது.

இறுதிப் போட்டியில் சென்ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது. முதல் பாதி ஆட்டத்தில் சென்ஜோன்ஸ் கல்லூரி அணி ஆதிக்கமாக விளையாடியது. முதல் பாதி நிறைவில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 26-18 என்ற புள்ளி அடிப்படையில் முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியில் சிறப்பாக விளையாடிய மத்திய கல்லூரி அடுத்தடுத்து புள்ளிகளைப்பெற்று ஆட்டத்தினை தன் பக்கம் மாற்றியது.

இறுதியில் 46-29 என்ற புள்ளியடிப் படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வென்று சம்பியனானது.

## உலகக்கிண்ண கால்பந்து அணிகளது தரவரிசை

உலகில் அதிகளவு ரசிகர்கள் விரும்பிபார்க்கும் கால்பந்தாட்டம். இதன் தரவரிசைப்பட்டியலில் 5 முறைகள் சம்பியன் பட்டம் வென்ற பிரேசில் முதலிடத்தில் உள்ளதாக சர்வதேச கால்பந்து சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தவிர ஐரோப்பிய சம்பியன் ஸ்பெயின் இரண்டாம் இடம் பிடித்துள்ளது. போர்த்துக்கல் நெதர்லாந்து, நடப்பு உலக சம்பியன் இத்தாலி ஆகியவை முறையே 3,4 மற்றும் 5 ஆவது இடத்தில் உள்ளன.

ஜேர்மனி 6ஆவது இடத்திலும் அதற்அடுத்த இரு இடங்களில் ஆர்ஜென்டீனா, இங்கிலாந்து ஆகியவை உள்ளன. பிரான்ஸ் 9 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்க அணி 14ஆவது இடத்தில் உள்ளது. அவுஸ்திரேலியாவுக்கு 20ஆவது இடம் கிடைத்துள்ளது.

# 2-வது முறையாக உருகுவே சம்பியன்; வாய்ப்பைக் கோட்டைவிட்ட இந்தியா




இரண்டாம் உலகப் போர் காரணமான 12 ஆண்டுகள் இடைவெளிக்குப்பின் நான்காவது உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடர் நடந்தது.

இம்முறை உலகக்கிண்ண தொடரை நடத்தும் வாய்ப்பை பிரேசில் பெற்றது. பிபா தலைவர் ஜுல்ஸ் ரிம்மட் 25 ஆண்டுகள் பதவி வகித்ததை குறிக்கும் வகையில், அவரது பெயர் கொண்டே இக் கிண்ணம் வழங்கப்பட்டது.



### ரவுண்ட் ரொபின் முறை

முதன் முறையாக இத் தொடரில் நொக் அவுட் முறை மாற்றப்பட்டு, ரவுண்ட் ரொபின் முறையில் போட்டிகள் நடத்தப்பட்டன.


மொத்தம் 16 அணிகள் இத் தொடருக்கு தெரிவாகின. இங்கிலாந்து, துருக்கி அணிகள் தொடரில் பங்கேற்க மறுத்துவிட்டடன.

ஆசியா தரப்பில் தகுதி பெற்றிருந்த இந்திய அணி பிபா வகுத்த விதிமுறையின்படி ஷு (பாதணி) அணிந்து விளையாடமறுத்தது. இதனால் தொடரில் பங்கேற்கும் வாய்ப்பை கோட்டைவிட்டது.

### அதிரடித் திருப்பம்

மொத்தம் நான்கு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் முதல் இடத்தைப் பெறும் அணிகள் இறுதிச் சுற்றுக்கு தேர்வாகின.

இதன்படி பிரேசில், உருகுவே, சுவீடன் மற்றும் ஸ்பெயின் அணிகள் இறுதிச்சுற்றுக்குள் நுழைந்தன.



இரண்டுமுறை சம்பியனான இத்தாலி அணி முதல் சுற்றில் சுவீடனிடம் தோல்வியடைந்ததால் தொடரைவிட்டு வெளியேறியது.

### உருகுவே சம்பியன்

இறுதிச் சுற்றில் சுவீடன் (7-1), ஸ்பெயின் (6-1) அணிகளுக்கு எதிராக அடுத்தடுத்து வெற்றிகளைப் பெற்ற பிரேசில் அணி, உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது.

இதேபோல் மறுமுனையில் உருகுவே அணி, சுவீடனுக்கு எதிராக (3-2) வெற்றியையும் ஸ்பெயின் அணிக்கு எதிராக (2-2) சமநிலையும் செய்திருந்தது.

இத் தொடரின் இறுதிப் போட்டியில் பிரேசில்-உருகுவே அணிகள் மோதின. இப் போட்டியைசமனிலைசெய்தாலே உலகக்கிண்ணத்தை கைப்பற்றலாம் என்ற நிலையில் பிரேசில் அணி களமிறங்கியது.

ஆனால் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய உருகுவே அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று உலகக்கிண்ணத்தைசுவீகரித்தது.

இதன் மூலம் உருகுவே அணி இரண்டாவது முறையாக உலகக்கிண்ணத்தை கைப்பற்றியது. இதற்குமுன் 1930ஆம்ஆண்டுமுதலாவது உலகக்கிண்ணத் தொடரில் உருகுவே அணி சம்பியனானது.

இத் தொடரில் 8 கோல்கள் அடித்து அசத்திய பிரேசிலின் கடமிர், தங்கப் பாதணி (கோல்டன் சூ) விருதைப்பெற்றார்.

### துளிகள்

நான்காவது உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடர் ஆரம்பமாவதற்கு முன் துருக்கி மற்றும் இந்திய அணிகள் வெளியேறிவிட்டன.

இதனால் பிரான்ஸ் அணியை கலந்து கொள்ளுமாறு பிரேசில் கேட்டுக்கொண்டது. இதற்கு ஒத்துக்கொண்ட பிரான்ஸ் நிபந்தனை ஒன்றை விதித்தது. லீக் போட்டிகளை எல்லாம் ஒரு இடத்தில் நடத்த வேண்டும் என்றது.

ஏனெனில் போட்டிகள் பங்கேற்க ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு 3 ஆயிரம் கிலோமீற்றர் தூரம் வரை செல்ல வேண்டியிருந்தது. ஆனால் இதற்கு பிரேசில் ஒத்துக் கொள்ளவில்லை இதனால் பிரான்ஸ் பங் கேற்கவில்லை.



# வடபகுதி வைத்தியசாலைகளை தரமுயர்த்துவதற்கு ஐ.நா.உதவி

(கொழும்பு)

ஐ.நாவின் சிறுவர்களுக்கான அமைப்பான யுனிசெப்பின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் மற்றும் மனநிலை வைத்தியசாலைகள் கிளிநொச்சி மற்றும் மன்னார் பகுதிகளில் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி வைத்தியசாலையின் குழந்தைகள் பிரிவு மீள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதுடன் மனநிலை சிகிச்சை பிரிவும் தரமுயர்த்தப்பட்டுள்ளது. மேலும் மன்னார் முசலி பகுதியில் மகப்பேற்று பிரிவும் அமைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் அமைப்பான யுனிசெப் அமைப்பின் உதவியுடன் அமைக்கப்பட்ட இந்த வைத்தியசாலை பிரிவுகளை யுனிசெப் பிரதிநிதி பிலிப்டொமெலே, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் திறந்து வைத்துள்ளனர்.

போரின் போது கிளிநொச்சி வைத்திய சாலை அதிகளவு சேதங்களை சந்தித்ததுடன் அங்கிருந்த பல முக்கிய உபகரணங்களும் செயலிழந்திருந்தன. எனினும் யுனிசெப்பின் உதவியுடன் அறுவைச் சிகிச்சை பிரிவு, மகப்பேற்றுப்பிரிவு, சிறுவர் சிகிச்சைப் பிரிவு ஆகியன புனரமைக்கப்பட்டு நவீன வசதிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் உள்ள வைத்தியசாலைகளின் தரத்தை உயர்த்தும் நடவடிக்கைகளை தாம் தொடர்ந்து மேற்கொள்ளப்போவதாக பிலிப் டொமெலே தெரிவித்துள்ளார். (ச-5)

# அமைச்சர் பசில் சென்ற நிகழ்வில் பொதுமக்கள் கூடி ஆர்ப்பாட்டம்

(மன்னார்)

மன்னார் சிலாவத்துறையில் புனரமைக்கப்பட்டுள்ள வைத்தியசாலை கட்டிடத் திறப்பு விழா வைபவத்தில் கலந்து கொள்வதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதியின் சகோதரருமாகிய பசில் ராஜபக்ஷ அங்கு சென்றபோது அந்தப் பகுதியில் அமைந்துள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்தையும், கடற்படை முகாமையும் அகற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

மன்னார் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சிலாவத்துறை நகரின் பெரும் பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இதனால் போர் முடிந்து ஒரு வருடமாகியுள்ள நிலையில் அந்தப் பகுதிகளுக்குத் திரும்பிச் சென்றுள்ள இடம்பெயர்ந்த மக்கள் தமது காணிகளுக்குச் செல்ல முடியவில்லை. அந்தப் பகுதிகளில் உள்ள பொதுக்கட்டடங்கள் பொது இடங்கள் என்பவற்றையும் ஏனைய இடம்பெயர்ந்த மக்கள் பயன்படுத்த முடியாதுள்ளது.

இந்த நிலையில் சிலாவத்துறை அதியுயர் பாதுகாப்பு வலயத்தையும் அங்குள்ள கடற்படை முகாமையும் அகற்றுமாறு கோரி சுமார் 25 பேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் கவனத்தை ஈர்த்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஆர்ப்பாட்டக்காரர்கள் சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டத்தை முன்னின்று நடத்திய நான்கு பேர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## அமைச்சர் பீரிஸ் திடீர்...

அமெரிக்க தேசிய பத்திரிகையாளர் சங்கம் ஏற்பாடு செய்த கூட்டம் ஒன்றில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இலங்கையுடனான அமெரிக்க உறவுகள் என்ற தலைப்பில் உரையாற்றுவதற்காக அங்கு வந்திருந்தார்.

கூட்டம் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது எதுவும் பேசாமல் அமைச்சர் அங்கிருந்து திடீரென வெளியேறினார்.

ஏன் அவர் வெளியேறிச் சென்றார் எனத் தமக்கு எதுவும் புரியவில்லை எனக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த தேசிய பத்திரிகையாளர் சங்கத்தைச் சேர்ந்த ரெஜின்டர் சிங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கிலாரி கிளின்டனுடன் பீரிஸ் நேற்றுச் சந்திப்பொன்றை நடத்தவிருந்தார். இந்தச் சந்திப்புக்கு முன்னோடியாகவே தேசிய பத்திரிகையாளர் சங்கத்தில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த பல வருடங்களுக்கு மேலாக அமெரிக்காவில் செல்வாக்கு மிக்க அமைப்பாகத் திகழ்கின்றது தேசிய பத்திரிகையாளர் சங்கம். அமெரிக்க ஜனாதிபதிகள், முன்பு ஆட்சியிலிருந்த மன்னர்கள், மகா ராணிகள், பிரதமர்கள், அமைச்சர்கள் எனப் பிரபலங்கள் எல்லோருமே தேசிய பத்திரிகையாளர் சங்கத்தின் ஆதரவுடன்தான் செல்வாக்குப் பெற்றுக் கொண்டு வந்திருக்கின்றார்கள்.

அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இந்த அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்திலிருந்து பீரிஸ் வெளிநடப்புச் செய்தமையானது பெரும் பரபரப்பையும் சர்ச்சையையும் ஏற்படுத்தியுள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்தன.

இது ஒரு புறம் இருக்க-இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவுக்கு 2009 ஆம் ஆண்டு சிறந்த ஊடக சுதந்திரத்திற்கான விருது அமெரிக்காவின் தேசிய பத்திரிகை சங்கத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

கடந்த வருடம் அந்த விருது லசந்தவின் சார்பாக அவரது மனைவிக்கு வழங்கப்பட்ட அதே மண்டபத்தில்தான் பீரிஸின் கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது.

இதேவேளை பத்திரிகையாளர் சங்கத்துடன் இடம்பெற்ற முறுகல் நிலை காரணமாகப் பீரிஸ் அங்கிருந்து வெளிநடப்புச் செய்திருக்கக் கூடும் எனவும் இலங்கை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (இது தொடர்பான மற்றொரு செய்தி உள்ளே) (ச-5)

## நாடு...

களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. யுத்தத்தின் பின்னரான முதலாவது சனத்தொகை மதிப்பீடு இது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## குடிநீர்...

இன்று இடம்பெறவுள்ளது என்று அரசாங்க அதிபர் மேலும் கூறினார்.

இதேவேளை இன்றைய இக் கலந்துரையாடலில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ஹருகிகோ குருடா கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-5)

## பெயர்...

விபரங்களைப் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டிருந்த நிலையில் இந்தப் பட்டியலில் அரசியல் மற்றும் இராணுவப் பிரிவைச் சேர்ந்த முன்னணி உறுப்பினர்களின் பெயர் விபரங்கள் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

போரின் பின் இராணுவத்திடம் சரணடைந்த புதுவை இரத்தினதுரை, பாலகுமாரன், யோகரத்தினம் யோகி போன்றோர் கொல்லப்பட்டுள்ளதாக ஊகங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

அதை உறுதி செய்வதுபோல் இவ்வாறு பட்டியலில் இல்லாதவர்கள் தற்போது உயிருடன் இல்லை என்றே கருத வேண்டும் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ச-5)

## மீள்...

களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இவ்வருடம் 150 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ச-5)

# இராணுவத்திற்கு பொதுமன்னிப்பு

(கொழும்பு)

படையிலிருந்து தப்பியோடியவர்களுக்கு மீண்டும் பொதுமன்னிப்பு வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

படையிலிருந்து ஓடியவர்கள் அடுத்த மாதம் 7 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் தங்களது கடமையிலிருந்து சட்டரீதியாக ஓய்வு பெறலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பின்னர் மீண்டும் ஒரு பொது மன்னிப்பு வழங்கப்பட மாட்டாது என இராணுவம் அறிவித்துள்ளது. (ச-5)

## மலேசியாவில்...

ஷியக் கடலில் கடந்த ஒரு சில நாள்களுக்கு முன் கைதான 26 இளைஞர்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற தகவல் வெளியாகவில்லை.

இந்தோனேஷியாவின் மத்திய யாவா மாகாணத்திலிருந்து தென்கிழக்கில் அமைந்துள்ள இந்து சமுத்திரத்தில் 26ற்கும் மேற்பட்ட இலங்கை அகதிகளை ஏற்றிய படகு என நம்பப்படும் படகொன்று தரித்து நின்றதாக இந்தோனேஷியத் தரப்புத் தகவல்கள் தெரிவித்திருந்தன.

இந்தோனேஷிய மீனவர்கள் இந்த இலங்கை அகதிப் படகை இனம் கண்டனர். இந்தப் படகு இலங்கை அகதிகளை ஏற்றி வரும் படகாக இருக்கலாம் என இந்தோனேஷிய அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டனர்.

அகதிகள், அதிகாரிகள் ஊடாக தமக்கு உதவுமாறு மீனவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இந்தோனேஷியக் கடலோரக் காவல் படையின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருந்தார். (ச-5)

# மரண அறிவித்தல்

## திருமதி பாலசிங்கம் இரத்தினசிகாமணி



வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் இரத்தினசிகாமணி 22.05.2010 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா இராசமலரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சோமசுந்தரம்-சின்னம்மாவின் அன்பு மருமகளும் தவயோகராஜன் (லண்டன்), கமலராஜன் (கனடா), குகதாஸ் (லண்டன்), ஜெயதர்சன் (கனடா) ஆகியோரின் அன்பு தாயாரும் ரேனுகா (லண்டன்), சுஜிதா (கனடா), பிரியதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

லண்டனில் வசிக்கின்ற ரீசிபன், கரிசா, கபிசா, அக்சயா, கனடாவில் வசிக்கின்ற அஜய், சஜீவ் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும், செல்வரட்ணம் (கொழும்பு), காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி அண்ணாமலை, துரைராஜசிங்கம் வரதராஜா மற்றும் மனோன்மணி (கனடா), சந்திரவதனா, பராசக்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30.05.2010 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்துத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனகரட்ணம் வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல்
குடும்பத்தினர்.

(சி-320)





Piano/ Violin NOTES

Organ, Guitar, வயலின், புல்லாங்குழல், வீணை போன்ற இசைக்கருவிகளுக்கான 300 சினிமாப்பாடல்களின் Notes விற்பனைக்குண்டு. Organ, Guitar, புல்லாங்குழல் பயிற்சி வகுப்புகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

KARAVEENA ISAI MANRAM
75, TEMPLE ROAD, NALLUR. T.P. No: 0777031293
(சி-258)



கரம்பொன்
அன்னை வேளாங்கன்னி மாதா
ஆலய வருடாந்த விழா-31.05.2010

| | | | |
|---|---|---|---|
| 26.05.2010 புதன் | "செபமாலை பக்தியின் மகத்தவம்" | நற்செய்தி லூக் 6:46-49 |
| 27.05.2010 வியாழன் | "ஜெபவாழ்வின் முன் மாதிரிகை" | லூக் 11:5-8 |
| 28.05.2010 வெள்ளி | "உம் வார்த்தையின்படி எனக்காகட்டும்" | நற்லூக் 8:19-21 |
| 29.05.2010 சனி | "இரக்கமுள்ளோர் பேறு பெற்றோர்" | மத் 5:1-10 |
| 30.05.2010 ஞாயிறு | "வாக்கு மனிதனானார் நம்மிடையே குடிகொண்டார்" (நற்கருணை ஆராதனை) | யோவா 1:10-14 |
| 31.05.2010 திங்கள் | காலை 7.00 மணிக்கு திருவிழா திருப்பலி "அன்னை மாரியாள் அனைத்துக்கும் அரசி" | |

குறிப்பு: அன்பளிப்பு வழங்க விரும்புவோர் புனித செபஸ்தியார் ஆலய பங்குத் தந்தையிடம் கையளித்து பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளவும்.

-பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.

அனுசரணை: A.C.D,JAFFNA.

(சி-322)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.